# 2014

# நிர்வாக அறிக்கை

## பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
1 ஆம் மாடி, தேசிய வீடமைப்புத் திணைக்கள கட்டிடம்,
சேர் சிற்றம்பலம் ஏ, கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 02
தொலை பேசி :- **24447429 / 2447432** பெக்ஸ்**: 2423606**
மின்னஞ்சல் **: cmastaff@sltnet.lk**

# பணிப்பாளர் சபை

சட்டத்தரணி திரு.கபில கமகே
தலைவர்
கூட்டாட்சி ஆதன முகாமை அதிகாரசபை

---

திரு.ஜி.யூ. உபவங்ச
பொது முகாமையாளர்/பணிப்பாளர் சபை செயலாளர்
கூட்டாட்சி ஆதன முகாமை அதிகாரசபை

---

திருமதி நாலனீ அமரதுங்க
பணிப்பாளர்
தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்
பொதுத் திறைசேரி

---

திரு.நிஹால் பெர்னாந்து
பணிப்பாளர் தலைமையதிபதி
நகர அபிவிருத்தி அதிகார சபை

---

வாஸ்து நிபுணர் திரு.ஹர்ஷன் டி சில்வா
பணிப்பாளர் தலைமையதிபதி
நகர அபிவிருத்தி அதிகார சபை

---

பொறியியலாளர் திரு.ஆர்.டபிள்யூ.பீ. பாலசூரிய
பொது முகாமையாளர்
தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபை

---

பிரிகேடியர் திரு.மஹிந்த முதலிகே
– ஆர்.டப்.பீ – ஆர்.எஸ்.பீ.
பொது முகாமையாளர்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை

---

திரு. தமித குமாரசிங்ஹ
பணிப்பாளர் தலைமையதிபதி
இலங்கை பொது பயன்பாடு ஆணைக்குழு

---

திருமதி பத்ரானி ஜயவர்தன
நகர ஆணையாளர்
கொழும்பு மாநகர சபை

---

திரு.கே.பி.ஆர். தம்மிக நாமல் முதுகல
நகர ஆணையாளர்
தெஹிவள – கல்கிசை மாநகர சபை

---

திருமதி சாந்தா பீ. லியனகே
நகர ஆணையாளர்
ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டை, மாநாகர சபை

---

திரு.பி.எம். தமிந்த குமார
நகர ஆணையாளர்
மொறட்டுவ நகர சபை

---

திருமதி எச்.என்.எஸ். அங்கம்மன
நகர ஆணையாளர்
மொறட்டுவ நகர சபை

---

திரு.றொஹான் துடாவ
தலைவர்
துவாட பிரதர்ஸ்
(இலங்கை வர்த்தக சம்மேளன பிரதிநிதி)

---

திரு.பி. பிறேமலால்
தேசிய வீடமைப்பு, ஆதன அபிவிருத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர்
(தனியார்துறை அபிவிருத்தியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதி)

---

திரு.றியன்சி பெரேரா
கொழும்பு 06, இல. எவ்/ஜீ/10 வேளுவனாராம தொடர்மாடி வீட்டுத்திட்டம்
(கூட்டாட்சி ஆதன முகாமை அதிகாரசபை உறுப்பினர்)

# நோக்கு

நாட்டின் வீடமைப்பு தேவைகளுக்கான தீர்வெனும் வகையில் கூட்டாட்சிக் குடியிருப்புகள்









# அரும்பணி

கூட்டாட்சி ஆதனங்களைக் குடியிருப்பாளர்களின் நன்மை மற்றும் நலனோம்பலுடன் ஒத்துவரத்தக்க வகையில் நிர்மாணித்தல், அவ்வாதனங்களை முறையாக நிர்வகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்யும் பொருட்டு முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை நிறுவி ஆதனங்களைப் பராமரித்தல் ஆகிய பணிகளை ஒழுங்குறுத்துதல்.

# கூட்டிணைந்த தகவல்கள்

திணைக்களம்

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை

தாபிக்கப்பட்ட ஆண்டு
2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி
1973 ஆம் ஆண்டின் சட்ட இல 10
பொது வசதிகள் சபை மீளாய்வு
2003 ஆம் ஆண்டின் சட்ட இல 24 பொது வசதிகள் சபை
பொது முகாமையாளர்

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
1 ஆம் மாடி, தேசிய வீடமைப்புத் திணைக்கள கட்டிடம்,
சேர் சிற்றம்பலம் ஏ, கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 02

தொலைபேசி / பெக்ஸ்
2447429 / 2447432

மின்னஞ்சள் (ஈ - மெயில்)
cmastaff@sltnet.lk , it@condominium.lk

இணையத்தளம் (வெப்)
www.condominium.lk

# கூட்டுத் திட்டம்

## கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை



# நோக்கங்கள்

- கொண்டமினியப் பொதிகளின் கட்டுப்பாடு, முகாமைத்துவம், பாதுகாப்பு, ஆகியவற்றின் நிர்வாகி, கொண்டமினியம் சொத்து அல்லது உப கொண்டமினியம் சொத்து ஆகியவற்றின் பொது இருப்பிடம் மற்றும் பொது வசதிகள்,

- உறுதிப்படுத்திய பொது இருப்பிடம், பொது வசதிகள் ஆகியவை கொண்டமினியம் சொத்து அல்லது உப கொண்டமினியம் சொத்து போன்றவற்றை ஒழுங்கான நல்ல முறையில் பாதுகாப்பதுடன் சொத்துக்களை சிறந்த சேவையாற்றல் மற்றும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு அல்லது உரிமையாளர், உரியையாளர்களுக்கு உதவும் அவ்வேளையில் இவற்றிற்கு ஏற்படுகின்ற திருத்தத்திற்காக வேகமாக, பாதுகாப்பாக வெளியில் கொண்டு செல்லும் சம்பவம் முகாமைத்துவ கூட்டுத்தாபனம் அல்லது உரிமையாளர்களின் சுறுசுறுப்பான நடவடிக்கைகளின் குறைபாடாகும்.

- உறுதிப்படுத்திய அனைத்து கட்டிடங்களையும் சேர்த்துக் கொள்ளல் இந்த கொண்டமினியம் பொதிகளுக்கு உத்தரவாதமின்றி மறுபடியும் தீ போன்று அபாயகரமானது. நாகரீகமான கிளர்ச்சி, கலகம் அல்லது காப்புறுதி அல்லது காப்புறுதி செய்து அதன் வேண்டுகோளுக்கு இணங்க முகாமைத்துவ கூட்டுத்தாபனம் அல்லது அதன் உரிமையாளர்கள் மற்றும் இது மாதிரியான பயிற்சிக் கட்டணங்கள் அல்லது கட்டணங்கள் மீண்டும் பெறக் கூடியதாகும்.

- இது போன்று அகற்றப்பட்ட எல்லா அதிகாரமற்ற நிர்மாணங்களை எழுப்புதல், வெளியில் கொண்டு போவதற்காக தனித் தனியான உரிமையாளர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் இம்மாதிரியான கொண்டமினியம் பொதிகளை அல்லது மற்றுமொரு நபரை நேர் எதிர்மறையாக பதிவு செய்த கொண்டமினியம் திட்டமே கொண்டமினியம் சொத்து அல்லது பதிவு செய்யப்பட்ட உப கொண்டமினியம் சொத்து ஆகும்.

- இது போன்ற முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களின் கொண்டமினியம் சொத்துக்களின் அல்லது உப கொண்டமினியம் சொத்துக்களின் ஒழுங்கான செயற்பாடுகள், பாதுகாப்பு மற்றும் நிர்வாக நடிவடிக்கைகள் சுறுசுறுப்பாகவும், பாதுகாப்பாகவும் அமையும்.

- முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு உதவுகின்ற உரிமையாளர் அல்லது உரிமை கோருபவர்களின் கொண்டமினியம் பொதிகள் இது மாதிரியான கொண்டமினியம் சொத்துக்களின் அல்லது உப கொண்டமினியம் சொத்துக்களில் அளிக்கப்பட்ட வசதிகள் தண்ணீர், சாக்கடை, வடிகால்கள், காஸ், மின்சாரம், குப்பை அகற்றல், குளிரூட்டி, தொலைபேசி, வானொலி போன்ற சேவைகள் ஆகும்.

- இடமாற்றம் செய்யப்பட்ட உள்ளுரைச் சேர்ந்த அதிகார சபையின் கீழ் உள்ள வீதிகள், மதிப்பீடு செய்தல், கடன்கள், பூந்தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் இன்னும் திறந்த வெளிகள் போன்றவற்றை பாவிப்பதற்கு கொண்டமினிய சொத்துக்களின் அல்லது உப கொண்டமினியச் சொத்துக்களின் கீழ் உள்ள கொண்டமினியப் பொதிகளின் உரிமையாளர்களிற்கு உரிமை உண்டு.

- இதுபோன்ற கொண்டமினிய சொத்துக்களின் அல்லது உப கொண்டமினியச் சொத்துக்களின் கீழ் உள்ள கொண்டமினியப் பொதிகளிற்கு கொடுக்கப்பட்ட மற்றும் திருத்த வேலைகள்.

- கட்டிடங்களின் அபிவிருத்தி தொடர்பான அவதானிப்புக்கள் பதிவு செய்யப்பட்ட தற்காலிக கொண்டமினிய சொத்துக்களின் பாதுகாப்பான, உத்தரவாதம் அளிக்கப்பட்ட, ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட பந்தயக் கட்டிற்கான வட்டிகள் மற்றும் இது போன்ற பாதுகாப்பான வட்டிகளின் தலையீடு எப்போதும் அவசியம்.

- அரசாங்கத்தின் அனுமதியுடனே அமைச்சர் முறைப்படியுடன் கீழ்ப்படிவுள்ள கொண்டமினியம் மீள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் அடங்கியுள்ள முதலீட்டுத் திட்டங்களை மேற்கொண்டுள்ளார்.

- தேசிய வீடமைப்பு அதிகார சபை அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபை அல்லது உள்ளுராட்சி அதிகார சபை அல்லது பிற அரசாங்க ஸ்தாபனங்கள் அல்லது பிற தனியார் நிறுவன அபிவிருத்தியாளர்கள் ஒப்புக் கொண்டதற்கு இணங்க உத்தரவாதம் அளிக்கப்பட்ட இது போன்ற கொண்டமினியம் மீள் அபிவிருத்தி திட்டங்கள் அல்லது இணக்கப்பாடுடன் நிறைவேற்றப்பட்ட கொண்டமினியம் மீள் அபிவிருத்தித் திட்டங்கள், மற்றும் இவை போன்ற நிகழ்ச்சிகளிற்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

- இணக்கப்பாடுடன் பூர்த்தி செய்யப்பட்ட ஏதாவது கொண்டமினியம் கட்டிடங்களை பார்வையிடுவதற்கு பதிவு செய்யப்பட்ட உப கொண்டமினியம் திட்டம் அல்லது தற்காலிக கொண்டமினியம் திட்டம் போன்ற ஏதாவது சம்பவங்களில் உரிமையாளர்கள் நிறைவு செய்யப்பட்ட இதுபோன்ற திட்டங்களில் குறை காணலாம்.

- அபிவிருத்தி அல்லது மீள் அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளை கை மாற்றப்படுவதற்கு அதிகாரசபை எதிர்ப்பு கூறும்.

- மேற்கூறப்பட்ட நோக்கத்திற்காக அனேகமாக, அத்தியாவசியமான இது போன்ற எல்லா வேறு சட்டங்களும் அல்லது எல்லாவகையான சட்டங்களும் அதிகமாக எதிர்ப்புக் கூறும்.

- முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு உதவுகின்ற தீர்மானம் அல்லது பராமரிப்பு போன்ற பாவனைகளுக்கான உரிமையாளர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் மற்றும் ஏதாவது கொண்டமினியம் பொதிகள், அதுபோன்ற திறன் வாய்ந்த வீதிகள், மதிப்பீடு செய்தல், கடன்கள், பூந்தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் இன்னும் திறந்த வெளிகள் அல்லது நேரடியாக தலையீடு செய்யும் சுறுசுறுப்பாக உள்ள போதில் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தின் ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல் போன்ற திறமையான செயல்.

6.முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவு இத்தால் நக்கஞ்செய்யப்பட்டுப் பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது. :-

6. அதிகாரசபையானது அதன் குறிக்கோள்களை முறையாகக் கொண்டு நடாத்துவதற்காக, பின்வரும் தத்துவங்களுள் ஏதேனும் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றைப் பிரயோகித்தல் வேண்டும் :-

(அ) ஏதேனும் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனத்தைக் கொள்ளுதல், உரித்தாக்குதல், மானியம் அல்லது கொள்வனைமூலம் கொள்ளுதல் அல்லது கொடைவகையாக அல்லது வேறுவிதமாகப் பெறுதல் அத்துடன் அத்தகைய ஆதனத்தை வைத்திருத்தல், முகாமைசெய்தல், விற்றல், ஒப்படைத்தல், கொடுத்து மாற்றுதல், குத்தகைக்கு விடுதல் அல்லது வேறு வகையாகக் கையுதிர்த்தல் :

(ஆ) உள்ளூரிலாயினுஞ்சரி வெளிநாட்டிலாயினுஞ்சரி ஏதேனும் மூலத்திலிருந்து நன்கொடைகளையும் மரணசாதனக் கையளிப்புக்களையும் பெறுதல் :

(இ) பணிகளை நிறைவேற்றுவதில் அதனால் தேவைப்படுத்தப்படும் பணங்களைக் கடனாகப் பெறுதல் :

(ஈ) அதிகாரசபையினால் வாடகைக்கு விடப்பட்ட ஏதேனும் காணிச் சிறுகூறுகளாக அல்லது கட்டிடங்களுக்காக அல்லது கூட்டாட்சி ஆதனத்துக்காக வாடகை விதித்தல் :

(உ) இச்சட்டத்தின்கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் அதிகார சபையினால் ஆற்றப்பட்ட எவையேனும் சேகைளுக்காக கட்டணங்கள் அல்லது கொடுப்பனவுகள் விதித்தல் :

(ஊ) கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளில் சொந்தக்காரர்களுக்குள்ள அக்கறைகளுக்கு விகிதாசாரமாக அவர்களிடமிருந்து எவையேனும் கட்டுப்பணங்கள் அறவிடுதல் :

(எ) கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் பொது வசதிகளுக்கு அல்லது பொது அம்சங்களுக்குச் சொந்தக்காரர் உட்பட எவரேனும் ஆளினால் விளைவிக்கப்பட்ட ஏதேனும் சேதத்தைச் சீர்செய்வதில் உணரப்பட்ட செலவுகளை அவரிடமிருந்து அறவிடுதல் :

(ஏ) முகாமைக் கூட்டுத்தாபனத்தின் அல்லது கூட்டாட்சியாதனச் சிறுகூறின் சொந்தக்காரரின் அல்லது இருப்பாட்சியாளரின் வேண்டுகோளின்பேரில், ஏதேனும் கூட்டாட்சியாதனச் சிறுகூறின் மறுசீரமைப்பு, பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு உட்பட்ட எவையேனும் சேவைகளை அதற்கு வழங்குதலும் அதற்கான இறுப்பனவுகளை விதித்தலும் :

(ஐ) கட்டிட நிர்மாண வேலையைப் பொறுப்பேற்றல் :

(ஒ) ஏனைய கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளுக்கும் அல்லது கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் பொது அம்சங்களுக்கும் வசதிகள் அளிப்பனவாய குழாய்கள், கம்பிகள், வடங்கள், கம்பிவடக் குழாய்கள் என்பவற்றைப் பரிசோதிக்கும், பழுதுபார்க்கும் அல்லது புதுப்பிக்கும் நோக்கத்துக்காக அல்லது கூட்டாட்சி ஆதனத்தின் பொது வசதிகளை அல்லது பொது அம்சங்களைப் பராமரிக்கும், புதுப்பிக்கும், மறுசீரமைக்கும் அல்லது பழுதுபார்க்கும் நோக்கத்துக்காக அல்லது கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் அதிகாரமளிக்கப்படாத கட்டிட நிர்மாணங்களை அகற்றும் அல்லது அடித்தழிக்கும் நோக்கத்துக்காக அல்லது எவையேனும் இயைபான நியதிச்சட்டத்தேவைப்பாடுகள் இணங்கியொழுகப் படுகின்றனவா என நிச்சயப்படுத்தும் நோக்கத்துக்காக அல்லது இப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தத்துவங்களுள் எதனையும் பிரயோகிப்பதில் நியாயமான எல்லா வேளைகளிலும் ஏதேனும் கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்குள், ஒன்றில் தாமாக, அல்லது அதன் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர் மூலம், நுழைதல் :

(ஓ) பதிவு செய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி ஆதன வரைபடத்தில் காட்டப்பட்ட கட்டிட நிர்மாணத்தின் முன்னேற்றத்தைப் பார்வையிட்டு மீளாய்வு செய்யும் நோக்கத்துக்காக, தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனத்தின் ஏதேனும் காணிச் சிறுகூறுக்குள், நியாயமான எல்லா வேளைகளிலும், ஒன்றில் தாமாக அல்லது அதன் முறையாக அதிகார மளிக்கப்பட்ட முகவர்கள் மூலம் நுழைதல் :

(ஔ) அதிகாரசபையின் குறிக்கோள்களுள் எதனையும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக நியாயமானளவு தேவைப்படும்வாறான அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளுதல் மற்றும் அத்தகைய உடன்பாட்டொழுங்குகளைச் செய்தல் :

(க) கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பதிவு செய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனத்தின் முாமைத்துவக் கூட்டுத்தாபனத்துக்கும் சொந்தக்காரருக்கும் அல்லது சொந்தக்காரருக்கும் இருப்பாட்சியாளருக்கும் அல்லது சொந்தக்காரருக்கும் கொள்வனைகாரருக்கும் அல்லது சொந்தக்காரருக்கும் ஈடுபெற்றவருக்கும் அல்லது ஈடுபெற்றவருக்கும் உத்தேச கொள்வனைக்காரருக்கும் அல்லது ஈடுவைத்தவருக்கும் ஈடுபெற்றவருக்கும் இடையேயான பிணக்குகளைத் தீர்த்தல் :

(ங) அதிகாரசபையின் வேலையைக் கொண்டு நடாத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் தொழிலுக்கமர்த்துதலும் அதன் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் :

(ச) அதிகாரசபையின் அபிப்பிராயப்படி, அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதனை இயலச் செய்வதற்கு அவசியமான எல்லா விடயங்களையும் செய்தல்" .

# ஆண்டறிக்கை



# கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை 2014 ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை

2014 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் தொழிற்பாடுகளிலிருந்து 107.6 மில்லியன் ரூபா வருமானம் பிறப்பிக்கப்பட்டதோடு ஒட்டுமொத்த வருமானம் 121.6 மில்லியன் ரூபாவாக அமைந்தது. 2013 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் தொழிற்பாட்டு வருமானமாக விளங்கிய 59.8 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் தொழிற்பாட்டு வருமானம் 80% ஆல் அதிகரித்துள்ளது. 2013 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த செலவு 82.15 மில்லியன் ரூபாவாக அமைந்ததோடு 2014 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த செலவு 111.9 மில்லியன் ரூபாவாக அமைந்தது. 2014 ஆம் ஆண்டில் தேறிய இலாபம் 10.4 மில்லியன் ரூபாவாக அமைந்தது.

கூட்டாட்சி ஆதனத்துறையில் நிலவிய கீழே குறிப்பிட்ட காரணிகளே இந்நிலைமைக்கு ஏதுவாக அமைந்ததென்பதை இங்கு குறிப்பிடல் வேண்டும்.

- கூட்டாட்சி ஆதனங்களை புதிதாக நிர்மாணித்தலானது கணிசமான மட்டத்தில் அதிகரித்துள்ளதோடு இசைவுக்கடிதங்களை விநியோகிக்கையில் சான்றிதழ் வருமானத்தில் 1/3 ஐ அறவிடத் தீர்மானிக்கப்பட்டது.
- அரச மற்றும் தனியார் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் கூட்டாட்சி ஆதனங்களை புதிதாக நிர்மாணித்தலானது 2014 ஆம் ஆண்டில் அதிகரித்தது.

## கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணிப்பதற்கான பூர்வாங்க இசைவுக்கடிதங்களை விநியோகித்தல்

கூட்டாட்சி ஆதனமொன்றை நிர்மாணித்த பின்னர் கூட்டாட்சித் திட்டவரைபடம் அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்படுதல், சில நிர்மாணிப்புகளில் பொதுவசதிகள் முறையாக கிடைக்காமை போன்ற சிக்கல்களைக் குறைத்துக் கொள்வதற்காக இவ்வதிகார சபையிடமிருந்து பூர்வாங்க இசைவுக்கான விதப்புரைகள் பெறப்படல் வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக 2014 ஆம் ஆண்டில் நிர்மாணிக்க உத்தேசித்துள்ள 98 கூட்டாட்சி ஆதனங்களுக்காக பூர்வாங்க இசைவுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த இசைவு ஆலோசனைகள் ஆதன அபிவிருத்தியாளர்களுக்கு நிர்மாணப் பணிகளின்போது சிறந்த வழிகாட்டல்களை வழங்கியுள்ளன.

## கூட்டாட்சி சான்றிதழ்களை விநியோகித்தல்

அரசாங்க அல்லது தனியார் துறையினரால் நிர்மாணிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனங்களில் பொது அம்சங்கள் மற்றும் பொதுவசதிகள் அவற்றில் குடியிருப்பவர்களின் நன்மை மற்றும் நலனுக்கான திட்டமொன்று உள்ளதென்பதை உறுதிப்படுத்துதல் இவ்வதிகாரசபையின் பிரதானமான ஒழுங்குறுத்தல் பொறுப்பாக அமைகின்றது. இந்த கூட்டாட்சி சான்றிதழ் காரணமாக மேற்படி ஆதனங்களில் இருப்பிடக்கூறுகளின் உரிமையாளர்களுக்கு சம்பந்தப்பட்ட பொதுவசதிகளும் பொதுஅம்சங்களும் தொடர்பில் நிறைவான சிக்கலற்ற தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இச்சான்றிதழ் காரணமாக குறிப்பாக பொய்யாவணம் புனைந்து ஆதனங்களைப் பதிவுசெய்தல் மற்றும் விற்பனை உடன்படிக்கை மூலமாக பணத்தைப் பெற்று உரிமை மாற்றத்தை தாமதம் செய்தல் போன்றவற்றைத் தடுக்க இயலுமானதாக அமைந்துள்ளது.

மேலும் நிர்மாணித்தல் தரத்திற்கு அமைவாக அந்த கட்டட ஆதனத்திற்கு அவசியமான காப்புறுதித் திட்டங்கள், நீர், மின்சாரம் போன்ற பயன்பாட்டுச் சேவைகளை உரியவகையில் வழங்கவேண்டுமென அபிவிருத்தியாளர்களுக்கு அழுத்தம் கொடுக்க இச்சான்றிழை வழங்குவதன் ஊடாக இயலுமானதாக அமைந்துள்ளது.

மேலும் இச்சான்றிதழ் வருமானம் அதிகாரசபையின் பிரதான வருமான வழிகையாகவும் மாறியுள்ளது. 2005 ஆம் ஆண்டிலிருந்து இந்த அதிகாரசபையினால் 815 சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 2014 ஆம் ஆண்டில் 75 சான்றிதழ்கள் இலக்காகக் கொள்ளப்பட்ட போதிலும் சான்றிதழ்களுக்காக 81 விண்ணப்பங்களே கிடைத்தன.

இதற்கிணங்க 2012 – 2014 வரையான காலப்பகுதிக்குள் அதிகாரசபையினால் இத்தகைய சான்றதழ்களின் விநியோகம் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | வருடாந்த இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|---|
| 2012 | நிதிசார் (மில்.ரூ) | 60.9 | 21.025 |
| | பௌதீக | 116 | 58 |
| 2013 | நிதிசார் (மில்.ரூ) | 82.6 | 27.17 |
| | பௌதீக | 112 | 66 |
| 2014 | நிதிசார் (மில்.ரூ) | 29.425 | 94.16 |
| | பௌதீக | 75 | 110 |

2014 ஆம் ஆண்டில் கூட்டாட்சி சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்காக கிடைத்திருந்த விண்ணப்பங்களில் இசைவுச்சான்றிழை விநியோகிக்காமையால், உறுதிகளை வழங்காமையால் மற்றும் ஏனைய குறைபாடுகள் காரணமாக அவ்வாண்டில் சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டிராத கூட்டாட்சி ஆதனங்களின் எண்ணிக்கை 59 ஆகும்.

2008 ஆம் ஆண்டிலிருந்து கூட்டாட்சி ஆதனங்களின் நிர்மாணிப்புத் துறையானது பின்னடைவினை வெளிக்காட்டியபோதிலும் 2014 ஆம் ஆண்டளவில் அந்நிலைமை படிப்படியாக மாற்றமடைந்து வந்தது. நகர அபிவிருத்தி அதிகாரசபை கொழும்பிலும் அண்டிய நகரங்களிலும் 22 கூட்டாட்சி ஆதனங்களை நிர்மாணிக்கத் திட்டமிட்டு வேலைகளைத் தொடங்கியுள்ளது. நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆரம்பித்த 03 வீடமைப்புத் திட்டங்களின் வேலைகள் தற்போது நிறைவடைந்துள்ள போதிலும்

பொதுவசதிகள் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக இற்றைவரை விண்ணப்பிக்கவில்லை. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை 10 வீடமைப்புத் திட்டங்களைத் திட்டமிட்டு இன்றளவில் 06 கருத்திட்டங்களைத் தொடங்கி உள்ளது. நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை 03 கருத்திட்டங்களின் வேலைகளைத்தொடங்கி உள்ளது. தற்காலிக கூட்டாட்சி சான்றிதழ் 2003 இன் 39 ஆம் இலக்கமுடைய சட்டத்தினால் கட்டாயமாக்கப்படாமையால் இக்கருத்திட்டங்கள் நிறைவடையும்வரை இவ்வதிகாரசபையின் சான்றிழைப் பெறமுன்வராமை அதிகாரசபையின் எதிர்பார்த்த வருமானம் வீழ்ச்சியடையக் காரணமாக அமைந்துள்ளது.

தனியார் துறைப் பிரிவில் நிறைவு செய்யப்பட்ட 80 இற்கு கிட்டிய கட்டடங்கள இசைவுச்சான்றிதழைப் பெறஇயலாமல் போனமையால் இந்த அதிகாரசபையின் சான்றிதழுக்காக விண்ணப்பிக்க முடியாத நிலையில் உள்ளன. தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிலும் இத்தகைய 63 ஆதனங்கள் உள்ளன. இச்சிக்கலுக்கு தீர்வுகாண்பதற்காக அதிகாரசபையின் வெளிக்கள ஊக்குவிப்பாளராக இந்த 1999 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கமுடைய இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தை திருத்துவதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்று அவசியமான திருத்தங்களை சட்டவரைஞரிடம் சமர்ப்பித்துள்ளதோடு இன்றளவில் அதனோடு தொடர்புடைய வரைவுச் சட்டம் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது.

அத்துடன் ஒவ்வொரு கூட்டாட்சி ஆதனமும் நிர்மாணிக்கப்பட முன்னராக இந்த அதிகாரசபையிடமிருந்து தற்காலிக சான்றிதழைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற ஏற்பாடு உள்ளடக்கப்பட்ட 1973 இன் 10 ஆம் இலக்கமுடைய கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபைச் சட்டத்திற்கான திருத்த வரைவுச்சட்டமொன்று தற்போது சட்டவாக்க அலுவல்கள் பற்றிய அமைச்சு உபகுழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் பாராளுமன்ற உபகுழுவினால் அங்கீகரிக்கப்பட்ட திருத்தங்கள் பரிசீலனை செய்யப்படுகின்ற நிலையில் உள்ளன.

## முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களைத் தாபித்தல், பதிவு-செய்தல் மற்றும் முனைப்பாக பேணிவருதல்

பிரத்தியேக சொத்துவத்தைக் கொண்ட ஆதனமொன்று அதன் உரிமையாளர்களால் பராமரிக்கப்பட்டு வந்தபோதிலும் கூட்டாக அனுபவித்து வருகின்ற பொது அம்சங்களையும் பொது வசதிகளையும் பராமரித்தலானது திட்டவட்டமான ஒருவரால் புரியக்கூடியதொன்றல்ல என்பதால் கூட்டாக அனுபவித்து வருகின்ற அனைவரும் ஒன்றுசேர்ந்து இந்த பொதுவசதிகளையும் பொதுஅம்சங்களையும் முகாமை செய்வதற்கும் நிர்வகிப்பதற்குமான சட்டமுறையான கட்டமைப்பாக முகாமைத்துவக் கூட்டுத்தானங்கள் தாபிக்கப்படுகின்றன.

2005 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை அதிகாரசபையானது 829 கூட்டாட்சி ஆதனங்களுக்கான முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபித்துள்ளது.

அதிகார சபையினால் 2011 இல் இருந்து 2014.12.31 வரை தாபிக்கப்பட்ட அத்தகைய முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் பற்றிய முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களையும் குழுக்களையும் பதிவுசெய்தல்

| | Registration | | Registration renewal / Deactive M.Cs fransform to active | | Financial (Rs.Thousands ) | |
|---|---|---|---|---|---|---|
| | Targets | Prog-ress | Prog-ress | Prog-ress | Prog-ress | Prog-ress |
| 2012 | 250 | 219 | - | 129 | 1020 | 944 |
| 2013 | 40 | 77 | 681 | 370 | 1080 | 753 |
| 2014 | 50 | 45 | 140 | 387 | 1210 | 895 |

ஆயினும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபிக்கையில் கீழே குறிப்பிட்ட சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டது.

- ஆதனத்தின் பொதுஅம்சங்களை பராமரிப்பதற்காக முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் முக்கியத்துவம் பற்றி ஆதன உரிமையாளர்களிடம் புரிந்துணர்வின்மை.
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை போன்ற அரச நிறுவனங்களால் நிர்மாணிக்கப்பட்ட தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்களில் குடியிருப்பவர்கள் இன்னமும் முகாமைத்ததுவக் கூட்டுத்தாபனங்களை நிறுவுதல் சம்பந்தமாக ஆர்வம் காட்டாமை.
- தனியார் நிறுவனங்களால் நிர்மாணிக்கப்டுகின்ற பெரும்பாலான ஆதனங்களின் உரிமையாளர்கள் நிரந்தரமாக அவற்றில் குடியமராமை.
- இவற்றில் குடியிருப்பாளர்கள் அதிகமாக இருப்பதால் தன்னார்வ அடிப்படையின் கீழ் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளில் இணைந்து கொள்வதில் காட்டுகின்ற தயக்கம்.

பராமரிப்புக் கட்டணங்களை செலுத்துவதை தவறவிடுதலும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் பதவியினருக்கு ஏனைய குடியுருப்பாளர்கள் ஒத்துழைப்பு வழங்காமையும்

## கூட்டாட்சி ஆதனங்களின் பிணக்குகளைத் தீர்த்துவைத்தல்

கூட்டாட்சி ஆதனத்தின் முகாமைத்துவக் கூட்டத்தாபனத்திற்கும் உரிமையாளருக்குமிடையில், உரிமையாளருக்கும் குடியிருப்பாளருக்குமிடையில், உரிமையாளர் அல்லது கொள்வனவு செய்தவருக்குமிடையில் தோன்றுகின்ற பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்காக இடையீடுசெய்து செயலாற்றுவதற்காக 1970 இன் 10 ஆம் இலக்கமுடைய கூட்டாட்சி முகாமைத்துவ

அதிகாரசபை சட்டத்தின் மூலமாக அதிகாரசபைக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கிணங்க கூட்டாட்சி ஆதனமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக விற்பனை உடன்படிக்கையை செய்து கொண்டவரோ அல்லது குடியிருப்பாளரோ அதிகாரசபைக்கு தனது சிக்கலை எழுத்து மூலமாக அறிவித்தவிடத்து அதிகாரசபையினால் அச்சிக்கலைத் துரிதமாகத் தீர்த்துவைக்க அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தீர்த்துவைக்க இயலாத சிக்கல்கள் விசாரணைக்காக ஆற்றுப்படுத்தப்படும்.

அச்சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்காக விசாரணைக் குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளது. மேற்படி விசாரணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்ற முறைப்பாடுகளின் தன்மைக்கிணங்க கீழே காட்டப்பட்டவாறு வகைப்படுத்தமுடியும்.

- கட்டடங்களை நிர்மாணித்து விற்பனை உடன்படிக்கை மூலமாக விற்பனைசெய்து நீண்டகாலம் கழிந்துள்ளபோதிலும் கூட்டாட்சி திட்டவரைபடத்தை பதிவுசெய்யாமல் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளை வழங்காமை.
- அங்கீகரிக்கப்பட்ட கட்டடத்திட்டத்திற்கு முரணாக நிர்மாணித்தல். ஒருசில ஆதன அபிவிருத்தியாளர்கள் பலமாடிகளை நிர்மாணித்து விற்பனை செய்துள்ளமையால் இசைவுச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ள இயலாமை.
- பொதுஅம்சங்களும் பொதுவசதிகளும் அங்கீகரிக்கப்பட்ட கட்டடத்திட்டத்திற்கு அமைவாக வழங்கப்படாமை.
- குடியிருப்பாளர்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு பராமரிப்புக் கட்டணம் செலுத்தாமை. அனுமதி பெறாத நிர்மாணிப்புகளை மேற்கொள்ளல் மற்றும்
- வாகனத் தரிப்பிடங்கள் மற்றும் பொதுநிலப்பரப்பினை பாவிக்கையில் தோன்றுகின்ற சிக்கல்கள்.

2014 ஆம் ஆண்டில் இவ்விதமாக கிடைத்த 75 முறைப்பாடுகளைத் தீர்த்துவைக்க அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

| தீர்வுகள் வழங்கப்பட்ட பிணக்குகளின் எண்ணிக்கை | |
|---|---|
| 2012 | 87 |
| 2013 | 130 |
| 2014 | 75 |

பெதுமக்களின் மனக்குறைகளுக்கு உன்னதமான பிரதிபலிப்பினைக் காட்டுவதற்கான தாபனப் பொறியமைப்பு

- முறைப்பாடு கிடைத்த பின்னர் முறைப்பாடு கிடைத்த 03 நாட்களுக்குள் பிரதிவாதித்தரப்பினருக்கு முறைப்பாட்டின் பிரதியொன்றை அனுப்பிவைத்து அது சம்பந்தமான அவதானிப்புகளை 14 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளல்.
- முறைப்பாட்டாளரையும் பிரதிவாதித் தரப்பினரையும் அவதானிப்பு கிடைத்து ஒரு வாரத்திற்குள் விசாரணைக்காக அழைத்தல்.
- இணக்கப்பாடு ஏற்படின் முதலாவது தினத்திலேயே அதனைப் பதிந்து விசாரணையை முடிவுறுத்துதல்.
- வாய்மூலமான அல்லது எழுத்திலான சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல்.

விசாரணை தொடங்கி 03 மாதத்திற்குள் கட்டளையைப் பிறப்பித்தல்.

## விழிப்புணர்வூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள்

1973 இன் 11 ஆம் இலக்கமுடைய இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டம் மற்றும் 1973 இன் 10 ஆம் இலக்கமுடைய கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை சட்டம் மூலமாக ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள நோக்கங்களை ஈடேற்றுகையில் கூட்டாட்சி ஆதனங்களின் குடியிருப்பாளர்களின் சட்டபூர்வ ஒழுங்கமைப்பான முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தினால் ஆதனத்தின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை சிறப்பாக ஈடேற்றிக்கொள்ளல் சம்பந்தமாக விழிப்புணர்வூட்டுதலையும் ஆதன அபிவிருத்தியாளர்கள் மற்றும் ஏனையதரப்பினர்களுக்கு விழிப்புணர்வூட்டுதலையும் அடிக்கடி மேற்கொள்ளவேண்டி உள்ளது.

கூட்டாட்சித்துறையுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினர்களுக்கும் விழிப்புணர்வூட்டுதல் கீழே குறிப்பிடப்பட்ட படிமுறைகளினூடா கஇடையறாமல் மேற்கொள்ளப்படும்.

- “கூட்டாட்சி” காலாண்டு செய்தித்தாளின் 45,000 பிரதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.
- உலக குடியிருப்புதினத்தை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு வருடத்தினதும் ஒற்றோபர் மாதத்தில் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல், முகாமைத்துவக் கூட்டுத்தாபன பிரதிநிதிகளின் மாநாட்டினை நடாத்துதல் மற்றும் ஆதன அபிவிருத்தியாளர்களின் மாநாட்டினை நடாத்துதல்.
- முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களின் மகாசபைக் கூட்டங்களையும் விஷேட மகாசபைக் கூட்டங்களையும் அதிகாரசபை உத்தியோகத்தர்களின் தலைமையில் நடாத்துதல்.

இத்தகைய விழிப்புணர்வூட்டுதல்களுக்காக “கூட்டாட்சி” எனும் பெயரில் பிரசுரமொன்றை அச்சிட்டு வெளியிடுதலுக்கு மேலதிகமாக 2014 ஒற்றோபர் மாதத்தில் முகாமைத்துவக் கூட்டுத்தாபன பிரதிநிதிகளின் ஒன்றுகூடலும் ஆதன அபிவிருத்தியாளர்களின் ஒன்றுகூடலும் நடாத்தப்பட்டது. முகாமைத்துவக் கூட்டுத்தாபன பிரதிநிதிகளின் ஒன்றுகூடலில் ஏறக்குறைய 650 தலைவர்கள் பங்கேற்றனர். ஆதன அபிவிருத்தியாளர்களின் மாநாடு அரச உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்டதோடு ஆதன அபிவிருத்தியாளர்களின் சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்கான பிரம்மாண்டமான செயற்பொறுப்பு ஈடேற்றப்பட்டது.

### சுனாமி புனரமைப்பின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனங்களின் உரிமையைக் கையளித்தல்

இவ்வதிகார சபையினால் சுனாமி புனரமைப்பின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வின் மூலமாக கீழே குறிப்பிடப்பட்ட தகவல்கள் வெளியாகின.

- தொடர்மாடி வீடுகளாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களின் எண்ணிக்கை 39 ஆக அமைவதோடு வீடுகளின் எண்ணிக்கை 3749 ஆகும்.
- இரட்டை வீடுகளாக (இணைந்த) நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களின் எண்ணிக்கை 30 ஆக அமைவதோடு வீடுகளின் எண்ணிக்கை 2064 ஆகும்.

இந்த வீடமைப்புத் திட்டங்களின் உரிமைமாற்றத்திற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமையைக் கவனத்திற்கொண்ட அதிகாரசபை இந்த வீடமைப்புத் திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையை வகிக்கின்ற காணி, காணி அபிவிருத்தி அமைச்சுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதன் விளைவாக இத்தகைய ஆதனங்களின் உரிமையை மாற்றக்கூடிய வகையில் காணிச்சட்டத்தில் திருத்தங்களை தயாரிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டதோடு தற்போது அதனுடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகளை தயாரித்தல் நிறைவுசெய்யப்பட்டு சட்டவரைஞர் திணைக்களத்திடம் ஆற்றுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்பொருட்டு இவ்வதிகாரசபையும் காணிஅமைச்சும் காணித் திணைக்களம், நிலஅளவைத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களுடன் கூட்டாக 02 செயலமர்வுகளை நடாத்தியதோடு இதன்போது சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கான வரைவு தயாரிக்கப்பட்டது.

### அரசாங்க தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்களின் புனரமைப்பு

இந்த வீடமைப்புத் திட்டங்களின் குடியிருப்பாளர்கள் தமது வீடமைப்புத் திட்டங்களின் பராமரிப்பினையும் நிர்வாகத்தையும் சரிவர மேற்கொள்ளாமையால் தொடர்ச்சியாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் அரசநிதியினை பெருந்தொகையாக செலவிட நேரிட்டது. இந்த நிலைமையை ஆராய்ந்த பின்னர் இத்தகைய வீடமைப்புத் திட்டங்களின் குடியிருப்பாளர்களால் ஈடேற்றிக்கொள்ள இயலாத பாரியளவிலான திருத்தவேலைகளைச் செய்வதற்காக பொதுதிறைசேரி மூலமாக நிதியேற்பாடுளை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலைமை காரணமாக முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை நிறுவுவதில் புதியபோக்கு தோன்றியுள்ளது. அந்த ஆதனத்தின் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை முனைப்பாக வைத்திருப்பதன் மூலமாக புனரமைப்பிற்கு பின்னர் குடியிருப்பாளர்களே நிர்வாக மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதன் ஊடாக நீண்டகால ரீதியில் அரச செலவுகளை குறைத்துக்கொள்ளக்கூடிய நிலைமை தோன்றியுள்ளது.

| | வருடாந்த இலக்கு | | | முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| கருத்திட்டம் | வருடம் | நல-ன்பெறும் குடும்பங்-கள் | திறைசேரி நி-தியங்கள் | திறைசேரி நிதியங்கள் |
| அரசாங்க வீடமைப்புத் திட்டங்களில் முகாமைத்-துவக் கூட்டுத்தாபனங்களை தாபிப்பதற்காக வசதிகளை வழங்குதலும் அரசாங்க தொடர்மாடி வீடுகளை புனரமைத்தலும் | 2011 | 352 | 25.0 | 25.0 |
| | 2012 | 671 | 109.2 | 108.67 |
| | 2013 | 862 | 125.0 | 121.77 |
| | 2014 | 451 | 120.0 | 61.12 |

2014 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்ட தொடர்மாடி வீடுகள் புனரமைக்கப்பட்டன.

- சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்த வீடமைப்புத் திட்டம்
- கெட்டவலமுல்ல வீடமைப்புத் திட்டம்
- மல்லிகாராம வீடமைப்புத் திட்டம்
- ஜயவடனகம வீடமைப்புத்தி ட்டம்
- இதல்வத்த வீடமைப்புத் திட்டம்
- டெனிஸ்டர் த சில்வா மாவத்த வீடமைப்புத் திட்டம்
- ஜகத்புர வீடமைப்புத் திட்டம்
- குட்வில்வத்த வீடமைப்புத் திட்டம்

### கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையின் ஒழுங்குறுத்தல் இடையீடு

மேலே குறிப்பிட்ட அதிகாரங்களையும் ஏற்பாடுளையும் பயன்படுத்தி கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை 2014 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்ட மிகவும் முக்கியமான சேவைகளை ஈடேற்றுவதில் வெற்றிகண்டது.

இதுவரைகாலமும் அரசாங்க தொடர்மாடி வீடமைப்புத் தொகுதிகளில் உள்ள நீர்த்தாங்கி பம்பிநிலையத்தின் பராமரிப்பானது அந்த வீடுகளின் குடியிருப்பாளர்களிடமே கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் அதற்கான முறைசார் தொழில்நுட்ப அறிவு படைத்தவர்கள் குடியிருப்பாளர் மத்தியில் இல்லாமையால் பலவருடகாலமாக இவற்றின் திருத்தவேலைகளும் பராமரிப்பும் சிக்கலான நிலையில் இருந்தது. அதற்கான தீர்வாக கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை இடையீடுசெய்து சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரம் மூலமாக நீர்ப்பம்பி நிலையங்களின் திருத்தவேலைகளும் பராமரிப்பும் நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபையிடம் கையளிக்கப்பட்டது. இதன் ஆரம்பகட்ட நடவடிக்கையாக 10 அரசாங்க வீடமைப்புத் திட்டங்களைச் சேர்ந்த 9,389 குடும்பங்களுக்கு நன்மைகள் கிடைக்கத்தக்க வகையில் அப்பணிகள் 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ளதோடு தற்போது இப்பணிகளுக்காக

கேள்விப்பத்திரங்களை கோருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| வீடமைப்புத் திட்டம் | இருப்பிடக் கூறுக-ளின் எண்ணிக்கை | நிலக்கீழ் நீர்-த்தொட்டிகளின் எண்ணிக்கை | பம்பி நிலையங்க-ளின் எண்ணிக்கை | நீர்த்தாங்கிக் கோ-புரங்கள் |
|---|---|---|---|---|
| ஜல்தர வீடமைப்புத் திட்டம் | 400 | 01 | 01 | 01 |
| சொய்சாபுர வீடமைப்புத் திட்டம் | 1992 | 01 | 01 | 01 |
| மாளிகாவத்த வீடமைப்புத் திட்டம்– கொழும்பு-10 | 1520 | 01 | 01 | 01 |
| சர்பன்ரைன் வீடமைப்புத் திட்டம்–கொழும்பு 09 | 158 | 01 | 01 | 01 |
| கெட்டவலமுல்ல வீடமைப்புத் திட்டம்–கொழும்பு 08 | 352 | 01 | 01 | 01 |
| பூளுாமெண்டல் வீடமைப்புத் திட்டம் கொழும்பு 13 | 480 | 01 | 01 | 01 |
| ஆமர்வீதி வீடமைப்புத் திட்டம் கொழும்பு 13 | 300 | 01 | 01 | 01 |
| ஸ்ரீ சங்கராஜ மாவத்த வீ-டமைப்புத் திட்டம் கொழும்பு 13 | 278 | 02 | 01 | 01 |
| பம்பலபிட்டி வீடமைப்புத் திட்டம் கொழும்பு 04 | 293 | 01 | 01 | 01 |
| அன்டர்சன் வீடமைப்புத் திட்டம் கொழும்பு 05 | 616 | 01 | 01 | 01 |

- கடந்த பலதசாப்தங்களுக்கு முன்னர் நிர்மாணித்து குடியிருப்பதற்காக வழங்கியுள்ள போதிலும் இற்றைவரை கூட்டாட்சி ஆதனமாக பதிவுசெய்யப்படாத வீடுகளின் உரிமையை குடியிருப்பாளர்களுக்கு மாற்றிக்கொடுக்க இயலாதுள்ள ஆதனங்களை பதிவுசெய்யத்தக்க வகையில் 1999 இன் 04 ஆம் இலக்கமுடைய இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மை விசேட ஏற்பாடுகள் சட்டத்தை மீண்டும் திருத்தியமைக்க அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள 2013 ஆம் ஆண்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

  இன்றளவில் மேற்படி உறுதிகளை வழங்க சம்பந்தப்பட்ட வரைவுச்சட்டம் சட்டவரைஞரால் தயாரித்துநிறைவு செய்யப்பட்டுள்ளது. அதன்மூலமாக 30 – 40 வருடங்களாக உறுதிளைப்பெற இயலாதுள்ள அரசாங்க மற்றும் தனியார்துறை நிர்மாணித்த வீடமைப்புத் திட்டங்களைச் சேர்ந்த ஏறக்குறைய 15,000 குடும்பங்களுக்கு நன்மைகள் உரித்தாகும்.

- 1930 இல் நிர்மாணிக்கப்பட்ட கொழும்பு 14 வேல்ஸ்குமார வீடமைப்புத் திட்டமும் 1970 இல் நிர்மாணிக்கப்பட்ட வேகந்த வீடமைப்புத் திட்டமும் குடியிருக்கப் பொருத்தமற்ற பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்ட வீடமைப்புத் திட்டங்களாக விளங்கின. அதற்கிணங்க குடியிருப்பாளர்கள் இலக்காகக்கூடிய ஆபத்துக்களிலிருந்து மீட்டெடுப்பதற்காக உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய வேகந்த வீடமைப்புத் திட்டத்தையும் வேல்ஸ்குமார வீடமைப்புத் திட்டத்தையும் மீண்டும் அபிவிருத்தி செய்வதற்கான அமைச்சரவைத் தீர்மானத்தைப் பெறுவதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதன் விளைவாக அவற்றின் குடியிருப்பாளர்களுக்கான முதன்மைப் பணியாகக் கருதி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நகரப் புத்துயிரளிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற வீடமைப்புத் திட்டங்களில் வீடுகளை வழங்க அமைச்சரவை தீர்மானித்தது.

- 1973 இன் 10 ஆம் இலக்கமுடைய கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரபை சட்டத்தையும் 1973 இன் 11 ஆம் இலக்கமுடைய இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மை (திருத்தச்) சட்டத்தையும் நிகழ்காலத்திற்கு ஒத்துவரத்தக்கவகையில் திருத்தியமைப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக தற்போது இத்திருத்தச்சட்டத்தின் வரைவு சட்டவாக்க அலுவல்கள் பற்றிய அமைச்சரவை உபகுழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதனோடு தொடர்புடைய திருத்தங்கள் சேர்க்கப்பட்டு வருகின்றன. இதன் மூலமாக கூட்டாட்சித்துறையில் நிலவுகின்ற பல்வேறு நடைமுறைச் சிக்கல்களுக்கு தீர்வுகள் கிடைப்பதோடு அதிகாரசபைக்கு தற்போதையதைப் பார்க்கிலும் விரிவான சேவையை விஸ்தரிக்க இயலுமானதாக அமையும்.

2013 ஆம் ஆண்டில் அதிகாரசபையினால் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களின் அதிகாரங்களை அதிகரிப்பதற்காகவும் அவற்றின் செயற்பாட்டினை ஊக்குவிப்பதற்காகவும் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கிணங்க திருத்தப்பட்ட இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டத்திற்கமைவாக ஏதேனும் கூட்டாட்சி ஆதனத்தின் மற்றும் பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் குடியிருப்பாளர்களுக்கு மின்சாரத்தை விநியோகிக்கும் அதிகாரத்தை முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக்கொள்ள இயலுமென்பதோடு இந்த திட்டத்திற்கிணங்க பங்களிப்புத் தொகையினை செலுத்தாத குடியிருப்பாளர்களுக்கான நீர்விநியோகத்தை துண்டிக்கக்கூடியவகையில் மின்சார வழங்கலைத் துண்டிக்க முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

## பணிப்பாளர் சபைக்கூட்டங்களும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களும்

2014 ஆம் ஆண்டில் 07 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டதோடு, துறைசார் முக்கியத்துவம் வாய்ந்த பல பணிப்பாளர் சபைப்பத்திரங்கள் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. 07 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களும் 02 விஷேட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்களும்

நடத்தப்பட்டன.

## மனிதவள முகாமைத்துவப் பணிகள்

பிரதிப் பொது முகாமையாளர் (ஒழுங்குறுத்தல்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்ய மேற்கொண்ட முயற்சி இற்றைவரை வெற்றியளிக்கவில்லை. பதவியுடன் ஏற்புடைய தகைமைகளைத் தளர்த்தவும் பிரதிப் பொது முகாமையாளர் பதவிகளுக்கு ஏற்புடைய சம்பளத் தொகுதியினை 3:1 என்றவகையில் திருத்திக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் செய்யப்பட்ட கோரிக்கை வரிசை அமைச்சினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

## பதவியணி மறுசீரமைப்பு

2014 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் பதவியணி, பதவியுயர்வு மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.

2014 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 139 ஆக அமைந்த போதிலும் 2014 திசெம்பர் மாதமளவில் பதவியணி 108 ஆகவே நிலவியது. நிலவுகின்ற வெற்றிடங்களை 2015 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## அதிகாரசபையின் பதவியணிக்கு பயிற்சியளித்தல்

அதிகாரசபையின் பதவியணிப் பயிற்சிக்காக 14 ஊழியர்கள் உள்நாட்டுப் பயிற்சிப்பாடநெறிகளில் பங்கேற்கச் செய்விக்கப்பட்டனர்.

## வினைத்திறன்காண் தடைப்பரீட்சை

முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) MAI-I-III தரத்தின் 08 உத்தியோகத்தர்களுக்காக 2014 ஆம் ஆண்டில் வினைத்திறன் காண்தடைப் பரீட்சை நடத்தப்பட்டது.

## நன்றி நவிலல்

அதிகார சபையின் 2014 ஆம் ஆண்டின் செயலாற்றுகைக்காக பங்களிப்புச் செய்த பதவியணியைச் சேர்ந்த அனைத்துஊழியர்களுக்கும், அதிகாரசபையின் பணிகளுக்காக ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அமைச்சுகள், திணைக்களங்கள், அரச மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்களுக்கும், பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகிறேன். மேலும் அதிகாரசபையின் பயணப்பாதையினை உறுதியானதாக அமைத்துக் கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்கி எமக்கு தைரியமளித்த நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சருக்கும் பிரதியமைச்சருக்கும் பணிப்பாளர் சபைக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர்களை உள்ளிட்ட பதவியணிக்கும் அதிகாரசபையின் பணிகளின் போது நல்கிய ஒத்துழைப்புக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சீ.ஏ. விஜயவீர

தலைவர்

கூட்டாட்சி ஆதன முகாமை அதிகார சபை

2014ஆம் ஆண்டின் கணக்காய்வு, முகாமைத்துவ குழு அறிக்கை

2014 கணக்காய்வு, முகாமைத்துவக்குழு பின்வரும் அலுவலர்களைக் கொண்டிருந்தது.

| |
|---|
| திருமதி நாலனீ அமரதுங்க<br>பணிப்பாளர்<br>தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்<br>பொதுத் திறைசேரி<br><br>குழுத் தவிசாளர்<br>கணக்காய்வு, முகாமைத்துவக்குழு<br><br>(திறைசேரி பிரதிநிதி) |
| கே.பி.சீ. தம்மிக நாமல் முதுகல<br>உறுப்பினர்<br><br>நகர ஆணையாளர்<br>தெஹிவள – கல்கிசை மாநகர சபை |
| பிரிகேடியர் திரு.மஹிந்த முதலிகே<br>உறுப்பினர்<br>பொதுமுகாமையாளர்<br>தேசிய வீடமைப்பு அபிவிருத்தி<br>அதிகாரசபை |
| திரு.ஈ.கே.கே.எஸ். எதிரிசிங்ஹ கண்காணிப்பாளர்<br>கணக்காய்வு அதிகாரி<br>பிரதி கணக்காய்வாளர்<br>தலைமையதிபதியின் பிரதிநிதி‘<br>கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம |
| திருமதி சாந்த பீ. லியனகே<br>மாற்று உறுப்பினர்<br>நகர ஆணையாளர்<br>ஸ்ரீ ஜயவர்தனபுர் மாநகர சபை |

அதிகாரசபையின் அழைப்பு உத்தியோகத்தர்களாக பின்வருவோர் பங்கேற்றிருந்தனர்.

| |
|---|
| சட்டத்தரணி திரு. கபில கமகே<br>தலைவர் |
| திரு.ஜி.யூ. உபவங்ச<br>பொதுமுகாமையாளர் / பணிப்பாளர்குழு செயலர் |
| திரு.கே.எச்.ஏ. உபாலி<br>பிரதி முகாமையாளர் (நிதி) |
| திரு.பீ. மஹேஷ் குணதிலக<br>(2014 யூன் தொடக்கம் )<br>உள்ளக கணக்காய்வாளர் |

ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான 09 கூட்டங்களில் 02 கூட்டங்கள் விசேட கணக்காய்வு, முகாமைத்துவக் குழுக் கூட்டங்களாக அமைந்தன.

மீளாய்வு ஆண்டில் நடாத்தப்பட்ட கூட்டங்களின்போது ஒழுங்குபடுத்தல் அதிகாரபீடம் என்ற வகையில் கூட்டாட்சி ஆதனத் துறையின் எதிர்கால முன்னேற்றம் கருதி கீழ்க்காணும் முடிவுகளை நடமுறைப்படுத்தத் தேவையான திட்டங்கள் வகுக்கப்பட்டன.

- 1973ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க கூட்டாட்சி ஆதன முகாமை அதிகாரசபை சட்டத்தை தற்காலத்திற்கு ஏற்றவாறு நாளதுவரைப்படுத்தி முன்வைக்கப்பட்ட திருத்தங்களுக்கு அமைச்சரவையின் அதிகாரம் கிடைத்த பின்னர், அமைச்சரவை உப குழுவின் முடிவின்படி சட்டத்திருத்தத்தின்போது அதிகாரசபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் குறைக்க வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டதையடுத்து உத்தேச திருத்தங்களை மேற்கொள்வதற்கென மீண்டும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- 2004 ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்கள் குடியமர்த்தப்பட்ட கூட்டாட்சி ஆதன வீடுகள், பிற வீடுகளுக்கான சாட்டுதல் உறுதிகளை வழங்குவதற்காக காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகளை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
- கட்டடங்கள் அமைக்கப்பட்டு 80 வருடங்கள் கடந்துள்ள கொழும்பு 14, வேல்ஸ் குமாரமாவத்த வீடமைப்புத் திட்டமும் 40 வருடங்கள் கடந்துள்ள கொழும்பு 02, வேகந்த வீடமைப்புத் திட்டமும் ஆபத்தை எதிர்கொள்ளும் நிலையிலுள்ளதால் கூட்டாட்சி ஆதன முகாமை அதிகார சபை சட்டத்தின் 5 ‘க’ பிரிவின்படி அவற்றை மீள அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களைத் தயாரிப்பதற்காக அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவருதல்.
- 2014ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் நீதிமன்றத்தின் இசைவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டபோது இறுதிச் சான்றிதழுக்குரிய கட்டணத்தில் 1∴3 தொகையை அறவிடத் தீர்மானிக்கப்பட்டது.
  - 2014ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள்
  - கொழும்பு 09, மல்லிகாராம வீடமைப்புத் திட்டம்
  - பத்தரமுல்ல ஜயவர்தனகம வீடமைப்புத் திட்டம்
  - மொறட்டுவ இதல்வத்த வீடமைப்புத் திட்டம்

- கொழும்பு 15, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்த வீடமைப்புத்திட்டம்
- கொழும்பு 09, கட்டவலமுல்ல வீடமைப்புத் திட்டம்
- கொழும்பு 09, டனிஸ்ரர் டி சில்வா வீடமைப்புத் திட்டம்
- மொறட்டுவ ஜயகத்புர வீடமைப்புத் திட்டம்
- மொறட்டுவ குட்வில்வத்த வீடமைப்புத் திட்டம்

வீடமைப்புத் திட்டங்களின் புனர்நிர்மாணப் பணிகளது முன்னேற்றம் பற்றித் தொடர்ச்சியாக ஆராயப்பட்டதோடு பணிகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அதிகார சபையின் அலுவலர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

- 2010ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்குச் சமர்ப்பிக்க வேண்டிய கணக்காய்வு அறிக்கையைப் பரீட்சித்து தேவையான தீர்வுகளை வழங்குதல்.
- நீண்டகாலமாகப் பேணப்படுகின்ற கணக்கு மீதிகளை ஏடுகளிலிருந்து பதிவழிப்புச் செய்யத் தேவையான சிபாரிசுகளை பணிப்பாளர் சபையில் முன்வைத்தல்.
- அங்கீகரிக்கப்பட்ட பதவியணி வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பில் ஆராய்ந்து பணிப்புரை வழங்குதல்.
- அதிகாரசபையின் கூட்டிணைவுத் திட்டத்தை நாளதுவரைப்படுத்துவதற்காக செயற்பாட்டுத் திட்டத்தையும் வருடாந்த வரவு செலவு அறிக்கையையும் தொடர்ச்சியாக மீளாய்வு செய்து எதிர்பார்க்கும் இலக்குகளை அடைந்துகொள்வதற்கான பணிப்புரைகளை வழங்குதல்.
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய வீடமைப்பு ஆணையாளர் மற்றும் தனியாருக்கச் சொந்தமான பழைய கூட்டாட்சி ஆதனக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளை வழங்கக்கூடியவாறு 1999ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவது தொடர்பாக சட்டவரைஞர் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து இறுதி வரைவைத் தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.
- நகர மீளெழுச்சி வீடமைப்புத் திட்டங்களில் பயனாளிகளை விழிப்புணர்வு செய்வதற்கும் பயிற்றுவித்தலுக்கும் அலுவலர்களை ஈடுபடுத்தியதன் முன்னேற்றம் குறித்து தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்பட்டது.
- கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவினால் கீழ்க்காணும் விடயங்கள் தொடர்ச்சியான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

✓ வரவுசெலவுத் திட்ட மாறுபாட்டு அறிக்கை

✓ நிதிச் செயற்பாட்டு அறிக்கை

✓ காசுப் பாய்வும் திரவத் தன்மையும்

✓ வங்கி இணக்கக் கூற்றுக்கள்

✓ மனிதவள முகாமைத்துவ அறிக்கை

✓ போக்குவரத்துச் செலவு மீளாய்வு

- வரவுசெலவுத் திட்ட இலக்குகளை அடைந்துகொள்வது தொடர்பில் தொடர்ச்சியான மீளாய்வு.

கே.எச்.ஏ. உபாலி
பொது முகாமையாளர் (ப.க.) /
பணிப்பாளர் சபை செயலாளர்
கூட்டாட்சி ஆதன முகாமை அதிகாரசபை

# இல் நிதிக்கூற்று

2014 திசெம்பர்
31 இல் முடிவுற்ற
ஆண்டுக்கான நிதிசார்
செயலாற்றுகை கூற்று



## கூட்டாட்சி ஆதன முகாமை அதிகாரசபை
## 2014 திசெம்பர் 31ஆம் திகதியன்று நிதிக்கூற்று (ஐந்தொகை)

| | குறிப்பு | 2014 | 2014 | வரவுசெலவுத்திட்டம் 2014 |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| நடப்புச் சொத்தாய் அல்லாத சொத்துக்கள் | குறிப்பு 01 | | | |
| நிலையான சொத்துக்கள் | | | | |
| கதிர்காமம் சுற்றுலா வங்களா காணி | | 1,520,000 | 1,520,000 | 1,520,000 |
| கதிர்காமம் சுற்றுலா வங்களாி கட்டடம் | | 4,824,000 | 5,092,000 | 4,550,000 |
| மோட்டார் வாகனம் | | 7,601,835 | 10,144,513 | 1,248,000 |
| அலுவலகத் தளபாடங்களும் உருப்படிகளும் | | 474,204 | 23,679 | 255,000 |
| பொறி | | 756,698 | 434,440 | 1,880,000 |
| சாதனங்கள் | | 1,938,775 | 1,085,763 | 280,000 |
| | | 17,155,512 | 18,300,395 | 9,733,000 |
| **நீண்டகால முதலீடுகள் '** | | | | |
| வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பங்குகள் | | 3,000,000 | 3,000,000 | 3,000,000 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | | |
| இருப்புக் கணக்கு | குறிப்பு 02 | 1,421,964 | 828,664 | 1,000,000 |
| வியாபார கடன்படுநர்கள், பணியாளர் கடன் மற்றும் பெறுகை மீதி | குறிப்பு 03 | 37,231,056 | 35,140,368 | 40,250,000 |
| பிற வருமான மீதிகள் | குறிப்பு 04 | 1,969,911 | 1,421,939 | 1,400,000 |
| எதிர்கால கொடுப்பனவுகள் | குறிப்பு 05 | 96,110 | 99,706 | 115,000 |
| குறுங்கால முதலீடுகள் | குறிப்பு 06 | 14,120,667 | 11,087,347 | 100,300,000 |
| காசு, காசுக்குச் சமமான உருப்படிகள் | குறிப்பு 07 | 100,954,247 | 46,896,900 | 5,000,000 |
| மொத்தச் சொத்துக்கள் | | 155,793,955 | 95,474,924 | 148,065,000 |
| | | 175,909,467 | 116,775,319 | 160,798,000 |
| **பரிப்புகள்** | | | | |
| **நடைமுறைப் பரிப்புகள்** | | | | |
| இலங்கை வங்கி குத்தகைக் கடன் | குறிப்பு 08 | 2,796,429 | 2,796,429 | 2,796,000 |
| செலுத்த வேண்டியவை | குறிப்பு 09 | 26,911,429 | 63,114,742 | 77,019,000 |
| அட்டுறு செலவு | | 2,276,742 | 2,595,415 | 2,000,000 |
| கடன்படுநர்கள் / முற்பணம் | குறிப்பு 10 | 18,001,580 | 41,848,315 | 14,000,000 |
| ஏற்பாடுகள் | குறிப்பு 11 | 82,127,006 | 2,231,716 | 30,500,000 |
| மொத்த நடப்பு பரிப்புக்கள் | | 132,113,185 | 112,586,617 | 126,315,000 |
| **நடப்பு அல்லாத பரிப்புகள்** | | | | |
| குத்தகைக் கடன் | குறிப்பு 08 | 3,961,607 | 6,758,036 | 1,210,000 |
| பணிக்கொடை ஏற்பாடு | | 27,329,966 | 22,181,496 | - |
| மொத்த பரிப்புகள் | | 163,404,759 | 141,526,149 | 127,525,000 |
| தேறிய சொத்துக்கள் / உரிமையாண்மை | | 12,504,708 | (24,750,830) | 33,273,000 |
| **தேறிய சொத்துக்களில் உள்ளடங்கியவை** | | | | |
| அனுமதித்த மூலதனம் | | 500,000 | 50,0000 | 500,000 |
| அரசாங்க மூலதனம் | | 500,000 | 500,000 | 500,000 |
| மிகையூதியப் பங்குகள் | | 2,500,000 | 2,500,000 | 2,500,000 |
| | | 3,000,000 | 3,000,000 | 3,000,000 |
| மொத்தம் | | | | |
| கிடைத்த நிதி | | (53,672,258) | (44,710,261) | (23,980,000) |
| பிந்திய வருடத்திற்கான சீராக்கல்கள் | | 26,806,384 | - | 28,331,000 |
| ஆண்டினுள் மிகை (குறைபாடு) | | 10,449,154 | (8,961,997) | - |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 22,308,765 | 22,308,765 | 22,309,000 |
| பொது ஒதுக்கம் | | 1,350,000 | 1,350,000 | 1,350,000 |
| மூலதன மாற்றல்கள் | | 2,262,663 | 2,262,663 | 2,263,000 |
| மொத்த தேறிய சொத்து / உரிமையாண்மை | | 12,504,708 | (24,750,830) | 33,273,000 |

சட்டத்தரணி கபில கமகே
தவிசாளர்

ஜி.யு. உபவங்ச
பொதுமுகாமையாளர்

கே.எச்.ஏ. உபாலி
பிரதி பொதுமுகாமையாளர் (நிதி)

## கூட்டாட்சி ஆதன முகாமை அதிகாரசபை 2014
## சனவரி 31ஆம் திகதி தொடக்கம் மார்ச்சு 31ஆம் திகதி வரையான நிதி செயல் நிறைவேற்றக் கூற்று

| | | 2014 | 2013 | 2014 ரூபா |
|---|---|---|---|---|
| வருமானம் | | | | |
| தொழிற்பாட்டு வருமானம் | குறிப்பு 12 | 106,096,892 | 57,370,712 | 90,270,000 |
| பிற தொழிற்பாட்டு வருமானம் | குறிப்பு 13 | 1,496,325 | 2,436,226 | 1,610,000 |
| தொழிற்பாடு அல்லாத வருமானம் | குறிப்பு 14 | 3,998,330 | 3,377,358 | 4,040,000 |
| மொத்த தொழிற்பாட்டு வருமானம் | | 111,591,547 | 63,184,296 | 95,920,000 |
| வேதனத்திற்கெனப் பெறப்பட்ட திறைசேரி நிதி | | 10,000,000 | 10,000,000 | 20,000,000 |
| மொத்த புரள்வு | | 121,591,547 | 73184296 | 115,920,000 |
| தொழிற்பாட்டுச் செலவுகள் | | | | |
| பணியாளர் வேதனமும் கொடுப்பனவும் | குறிப்பு 15 | 82,185,267 | 48,732,807 | 62,770,000 |
| பிரயாணச் செலவு | குறிப்பு 16 | 764,574 | 1,611,288 | 800,000 |
| வழங்கலும் நுகர்வுப் பொருட்களும் | குறிப்பு 17 | 5,975,461 | 4,841,161 | 6,100,000 |
| பராமரிப்புச் செலவுகள் | குறிப்பு 18 | 6,087,965 | 4,639,920 | 5,400,000 |
| நியதி முறையான செலவுகள் | குறிப்பு 19 | 4,034,113 | 3,555,579 | 3,990,000 |
| நேர் செலவுகள் | குறிப்பு 20 | 1,699,760 | 5,560,266 | 1,910,000 |
| நிலையான சொத்து பெறுமானத் தேய்வு | | 3,045,684 | 9,228,662 | 5,020,000 |
| நிறுவன ஈட்டலில் கருத்திட்டச் செலவுகள் | குறிப்பு 21 | 39,561 | 14,313 | - |
| பிற செயற்பாட்டுச் செலவுகள் | குறிப்பு 22 | 165,945 | - | 850,000 |
| மொத்த தொழிற்பாட்டுச் செலவுகள் | | 103,998,330 | 78,183,996 | 86,840,000 |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மிகை / (குறைபாடு) | | 17,593,217 | (4,999,700) | 29,080,000 |
| நிதிச் செலவு | குறிப்பு 23 | 6,355,037 | 2,635,526 | 1,787,000 |
| தொழிற்பாடு அல்லாத செலவுகள் | குறிப்பு 24 | 789,025 | 1,326,771 | 1,245,000 |
| மொத்த தொழிற்பாடு அல்லாத செலவுகள் | | 7,144,062 | 3,962,297 | 3,032,000 |
| தொழிற்பாட்டு நடவடிக்கையின் பேரிலான மிகை /(குறைபாடு) | | 10,449,154 | (8,961,997) | 26,048,000 |
| நடைமுறைச் சொத்து விற்பனை மிகை | | - | | |
| வரி அடங்கலான தேறிய மிகை /(குறைபாடு) | | 10,449,154 | (8,961,997) | 26,048,000 |
| வருமான வரி ஏற்பாடுகள் | | | | 9,100,000 |
| தேறிய மிகை / (குறைபாடு) | | 10,449,154 | 16,005,542 | 16,948,000 |
| முன்கொண்டுவந்த மிகை / (குறைபாடு) | | (53,672,258) | (44,710,261) | 23,980,000 |
| | | (43,223,104) | (53,672,258) | 40,928,000 |
| முன்னைய ஆண்டின் சீராக்கல்கள் | | | | |
| பற்று மீதி | | (499,987) | - | - |
| வரவு மீதி | | 27,306,371 | - | - |
| | | 16,416,720 | (53,672,258) | 40,928,000 |

## 01 நிதிக் கூற்றுகள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் செயற்படுத்துதல் சந்தர்ப்பங்களுக்கு உகந்த வகையில் நியாயமான கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 02 கணக்கீட்டுக் கொள்கை

அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவாக பரஸ்பர ரீதியாக காலப்பகுதி தொடர்பான இணைத்தொடர்புடனும் வரலாற்றுக் கிரயத்தின் அடிப்படையிலும் அதிகார சபையின் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நிதிக் கொள்கைகளில் தாக்கம் செலுத்தக்கூடிய பணவீக்கக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு சீராக்கல்கள் செய்யப்படவில்லை என்பதுடன் அறிக்கை திரண்ட அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 03 அதிகாரசபையின் அமைவிடம்

கொழும்பு 02, ஸ்ரீ சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை கட்டடத்தில் அமைந்துள்ள கூட்டாட்சி ஆதன முகாமை அதிகாரசபை அகில இலங்கை ரீதியில் கூட்டாட்சி ஆதனங்கள் பற்றிய ஒழுங்குபடுத்தல் பணிகளை நிறைவேற்றி வருகின்றது.

## 04 அதிகார சபையின் சட்ட வடிவம்

2003ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க பொது வசதிகள் சபை (திருத்தச்) சட்டத்தால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி கூட்டாட்சி ஆதனங்களில் பொது வசதிகள் மற்றும் அம்சங்களின் பராமரிப்பு, நிருவாகம் கட்டுப்பாட்டுக்கான முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களை அமைத்தலும் ஒழுங்குபடுத்தலும், கூட்டாட்சி ஆதனங்களை அமைக்கும்போது அவற்றுக்குத் தேவையான பொது வசதிகள் பயனாளிகளின் தேவை நிறைவேற்றப்படும் விதத்தில் பயனாளிகளின் தேவை நிறைவேற்றப்படும் விதத்தில் வழங்கப்பட்டிருப்பதை உறுதிப்பத்தல்.

## 05 அதிகார சபையின் தொழிற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள்

- 1973ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க பொதுவசதிகள் சபை (திருத்தச்) சட்டம்.
- 1982ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க பொதுவசதிகள் சபைச் சட்டம்.
- 2003ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க பொது வசதிகள் சபை (திருத்தச்) சட்டம்.
- 1973ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சட்டம்.
- 1982ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மை (திருத்தச்) சட்டம்.
- 1999ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மை விசேட ஏற்பாடுகள் சட்டம்.

2003ஆம் ஆண்டின் 39ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மை (திருத்தச்) சட்டம்.

## 06 நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு ஒதுக்கத்தின்போது அதிகாரசபையின் கொள்கைபடி கொள்வனவுத் தேதியிலிருந்து விற்பனைத் தேதி வரை எளிய முறையில் பெறுமானத் தேய்வு ஒதுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| மோட்டார் வாகனம் | - | கிரயத்தில் 25% |
| அலுவலகத் தளபாடங்கள | - | கிரயத்தில் 20% |
| இயந்திரம், உபகரணம் | - | கிரயத்தில் 20% |
| அலுவலக உபகரணங்கள் | - | கிரயத்தில் 20% |
| கட்டடங்கள் | - | கிரயத்தில 04% |

## 07 பணிக்கொடை

அதிகாரசபையின் சகல பணியாளர்களுக்குமான பணிக்கொடை ஊதியம் அவர்களது சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்குகளில் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 2013 திசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான தொகை ரூபா 22,181,496.00 ஆக உள்ளபோதும் ரூபா 3,524,226.00 மட்டுமே முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## 08 இருப்பு

இருப்பு கொள்வனவு கிரயத்தின்படி மதிப்பீடு செய்து கணக்குகளில் சீராக்கல் செய்யப்பட்டுள்ளதோடு எவ்வித இலாப விகிதமும் உள்ளடக்கப்படவில்லை.

## 09 வருமானம்

மொத்த வருமானத்தை அடிப்படையாக வைத்து இலாபநட்டக் கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

## 10 அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன் ஒதுக்கீடு

ஆண்டிறுதியில் காணப்பட்ட கடன்படுநர்களின் வயது பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டு விளைவுக்கமைய பின்வருமாறு அறவிட முடியாத மற்றும் ஐயக் கடனுக்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வருடங்கள் 0-2 10%

வருடங்கள் 2-3 20%

வருடங்கள் 3-4 30%

வருடங்கள் 4-5 50%

வருடங்கள் 5க்கு மேல் 100%

இதன்படி நடப்பு ஆண்டின் கணக்குகளில் ரூபா 5,718,453.10 தொகை அறவிட முடியா மற்றும் ஐயக் கடனாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது

## 11 நிகழ்தகு பரிப்புகள்

லங்கா கேற் (தனியார்) கம்பனியிடமிருந்து அறவிட வேண்டியுள்ள ரூபா 807,187.50ஐ அறவிடுதல் மற்றும் வழக்கு இலக்கம் 53429/எம்ஆர் இன் கீழ் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ள அதிகார சபைக்கு அல்லது அதிகார சபையினால் தொடரப்பட்டுள்ள பிற வழக்குகளுக்கான நிகழ்தகு பரிப்புகள் இன்மையால் கணக்குகளில் அதற்கான ஒதுக்கீடு காட்டப்படவில்லை.

## 12 குத்தகைக் கடன்

2012ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 03 கார்கள் மற்றும் கெப் வண்டி ஒன்றுக்காக இலங்கை வங்கியிலிருந்து ஐந்து வருடங்களில் திருப்பிச் செலுத்தும் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 17,912,410.00 குத்தகைக் கடன் தொகையில் கணக்கில் காட்டப்பட்டுள்ளவாறு ரூபா 9,801,130.00 மேலும் செலுத்த வேண்டியுள்ளது

## 13 ஊழியர் சேமலாப, நம்பிக்கை பொறுப்பு நிதிய நிலுவை

சட்ட விதிகளின்படி அதிகாரசபையின் பணியாளர்களுக்கு 2006ஆம் ஆண்டு தொடக்கம் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியக் கொடுப்பனவு செலுத்தும்போது வாழ்க்கைச் செலவுப் படி கவனத்தில் கொள்ளப்படவில்லை.

அதன்படி, அத்தொகையைச் செலுத்துவதற்கென ரூபா 18,705,202.92 கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

## 14 மூலதனக் கருத்திட்டங்கள்

மூலதனக் கருத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் ரூபா 106,014,695.05 அரசாங்கத்தின் தேசிய வீடமைப்புத் திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட அவசர பழுதுபார்ப்புப் பணிகளுக்காகவும் ரூபா 1,576,649.50 கூட்டாட்சி ஆதனங்களில் குடியிருப்பவர்கள் மற்றும் துறைசார்ந்தவர்களை விழிப்புணர்வு செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குசெய்தல், கூட்டாட்சி ஆதன வெளியீடுகள், கருத்திட்டங்களை நடாத்துவதற்கெனவும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, தேசிய வீடமைப்புத் திட்டங்களில் மறுசீரமைப்பு பணிகளுக்கென கிடைத்திருந்த ரூபா 61,088,017.55 ஐ எஞ்சிய வேலைகளுக்கான ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 15 ஒதுக்கங்கள்

அதிகார சபையின் தேறிய சொத்துக்கள் / உரிமையாண்மையில் கீழ்க்காணும் ஒதுக்கங்கள் அடங்கியுள்ளன.

| | |
|---|---|
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | - ரூபா 22,308, 765.00 |
| பொது ஒதுக்கம் | - ரூபா 1,350,000.00 |
| மொத்த ஒதுக்கம் | - ரூபா 23,658,765.00 |

| சொத்து, பொறி மற்றும் உபகரணம் | 2014.01.01 திகதியன்று கிரயம் | ஆண்டில் கைப்பற்றல்கள் | ஆண்டில் அகற்றல் | 2014.12.31 திகதியன்று கிரயம் | குறிப்பு 01 2013 |
|---|---|---|---|---|---|
| கதிர்காமம் சுற்றுலா வங்களா காணி | 1,520,000 | - | - | 1,520,000 | 1520,000 |
| கதிர்காமம் சுற்றுலா வங்களா கட்டடம் | 6,700,000 | - | - | 6,700,000 | 6,700,000 |
| அலுவலக மரத் தளபாடங்களும் பாகங்களும் | 2,031,987 | 290,530 | - | 2,322,517 | 2,031,987 |
| மோட்டார் வாகனம் | 29,400,714 | - | - | 29,400,714 | 29,400,714 |
| இயந்திரம், உபகரணங்கள் | 3,144,071 | 1,010,875 | - | 4,154,946 | 3,144,071 |
| சாதனங்களும் உபகரணங்களும் | 1,072,951 | 559,396 | - | 1,632,347 | 1,072,951 |
| | 43,869,723 | 1,860,801 | - | 45,730,524 | 43,869,723 |

| கழி. பெறுமானத் தேய்வு ஒதுக்கம்ய | 2014.01.01 திகதியன்று திரண்ட பெறுமானத் தேய்வு ஒதுக்கம் | ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு ஒதுக்கம் | அகற்றலுக்கான பெறுமானத் தேய்வு ஒதுக்கம் | 2014.12.31 திகதியன்று திரண்ட பெறுமானத் தேய்வு ஒதுக்கம் | 2013 |
|---|---|---|---|---|---|
| (இ) மீளாய்வு ஆண்டின் இறுதியில் அதிகாரசபையின் தேறிய சொத்துக்களில் ரூபா 12,504,708 அனுகூல மீதியொன்று காண்பிக்கப்பட்டபோதும், கடந்த மூன்று வருடகாலத்தில் அது முறையே ரூபா 24,750,830, ரூபா 15,788,833 மற்றும் ரூபா 31,794,284 என மறைப்பெறுமானத்தைக் கொண்டிருந்தது. மீளாய்வு ஆண்டிலும் பணியாளர் சம்பளத்திற்கென திறைசேரியிலிருந்து கிடைத்த 10 மில்லியன் ரூபா மற்றும் 28.80மில்லியன் ரூபாவுக்கான கடந்த ஆண்டு சீராக்கல்கள் தேசிய சொத்துக்கள் அதிகரிப்பிற்கு பிரதான ஏதுவாக காணப்பட்டது. | (இ) கணக்காய்வு பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் இவ்வாறு தேறிய சொத்துக்களின் அதிகரிப்பிற்கு பிரான ஏதுவாக காணப்பட்டது. |

## 4 தொழிற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயல் நிறைவேற்றம்

மீளாய்வு ஆண்டில் அதிகாரசபையின் செயல்நிறைவேற்றம் பின்வருமாறு

| விடயம் | இலக்கு | | அடைவு | | | |
|---|---|---|---|---|---|---|
| | பௌதீக நிதி | தொகை ரூபா மில்லியன | பௌதீக நிதி | | தொகை ரூபா மில்லியன | |
| கூட்டாட்சி ஆதன சான்றிதழ் வினியோகம | 75 | 29.42 | 110 | 146 | 98.57 | 335 |
| முகாமைத்துவ கூட்டுத்தாபனம் மைத்தல் | 50 | 0.25 | 45 | 90 | 0.09 | 36 |
| அரச தொடர்மாடி வீடுகள புனரமைப்பு | 09 | 122 | 08 | 88 | 7.43 | 06 |
| சுனாமி சாட்டுதல் உறுதி வழங்கல் | 34 | 100 | - | - | - | - |

| | |
|---|---|
| (அ) மீளாய்வு ஆண்டில் கூட்டாட்சி ஆதன சான்றிதழ் விநியோகத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே நூற்றுக்கு 146 ஆகவும் 335 சதவீதமுமான கூடிய பெறுமதியைக் கொண்டிருந்தது. | (அ) 2014ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் இசைவுச் சான்றிதழ்களை வழங்கியபோது குறித்த வருமானத்தில் 13 பங்கு தொகையை அறவிடத் தீர்மானித்தன காரணமாக நடப்பு ஆண்டில் சான்றிதழ் விநியோகக் கட்டணம் அதிகரிப்பதற்கும் அதன் பௌதீக முன்னேற்றம் அதிகரிப்பதற்கும் நேரடியாக தாக்கம் செலுத்தியிருந்தது. |
| (ஆ) மீளாய்வு ஆண்டில் முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள் அமைக்கப்பட்டதன் நிதி முன்னேற்றம் எதிர்பார்த்த இலக்கிய 36சதவீத பெறுமானத்தைக் கொண்டிருந்தது. | (ஆ) முகாமைத்து கூட்டுத்தாபனம் அமைத்தலின் பௌதீக முன்னேற்றம் 90% காணப்பட்டபோதும் நிதி முன்னேற்றம் 64%ஆக இருந்தது. அரசாங்கத்தினால் நிர்மானிக்கப்பட்ட ஆதனங்களில் முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள் அமைக்கப்பட்டபோது சம்பந்தப்பட்ட பதிவுக்கட்டணங்களை அறவிடுவதில் காணப்பட்ட சிக்கல்கள் அதற்கு பிரதான காணியாக இருந்தமையால் முகாமைத்துவ கூட்டுத்தாபனம் அமைத்தலின் நிதி முன்னேற்றம் குறைந்த பெறுமானத்தைக் கொண்டிருப்பதற்கு ஏதுவானது. |
| (இ) அதிகாரசபை மீளாய்வு ஆண்டில் 122 மி.ரூ நிதியினைக் கொண்டு 09 தொடர்மாடி வீட்டுத்திட்டங்களில் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் இலக்கினைக் கொண்டிருந்தபோதும் ஆண்டினுள் 08 கருத்திட்டங்களில் வேலைகளை ஆரம்பித்திருந்தது. ரூபா 13.48 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமானத்திற்குரிய எலபிட்டிவல வீட்டுத்திட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | (இ) இந்த புனர்நிர்மாண வேலைகள் அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதும் குறித்த ஆண்டினுள் அந்த வேலைகளைப் பூர்த்தி செய்ய கூட்டுத்தாபனம் தவறியது. இந்நிலையில் எலபிட்டிவல வீட்டுத் திட்டத்தின் புனர்நிர்மாண வேலைகளை குறித்த ஆண்டினுள் ஆரம்பிக்க முடியாத நிலை எற்பட்டுள்ளது. |
| (ஈ) 420 கூட்டாட்சி ஆதனங்களை காப்புறுதி செய்வதற்கான கூட்டுத்தாபனங்களை அமைக்க அதிகாரசபை திட்டமிட்டிருந்தபோதும், மீளாய்வு ஆண்டில் 22ஆதனங்கள் மட்டுமே காப்புறுதி செய்யப்பட்டன. | (ஈ) அதிகாரசபை 2014ஆம் ஆண்டில் சான்றிதழ்களை விநியோகித்திருந்த 109 ஆதனங்களுக்கான காப்புறுத்தும் பரப்புகளை பெற்றுக்கொண்டுள்ளதோடு இன்றளவில் தனியார் துறையில் 293 முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களை காப்புறுத்தச் செய்வதற்கான நடவடிக்கைகளை அதிகாரசபை மேற்கொண்டுள்ளது. |

| | |
|---|---|
| (உ) ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கென அமைக்கப்பட்ட 34 கூட்டாட்சி ஆதன வீட்டுத்திட்டங்களுக்கான பதிவுச்சான்றிதழ்களை விநியோகிக்கும் இலக்கு வகுக்கப்பட்டபோதும் மீளாய்வு ஆண்டில் ஒரு சான்றிதழையேனும் விநியோகிக்க அதிகாரசபை தவறியுள்ளது. 2014ஆம் ஆண்டிலும் சுனாமி ஆதன உரிமையாளர்களுக்கு உறுதிகளை வழங்கத் திட்டமிடப்பட்டபோதும் சம்பந்தப்பட்ட ஆதனங்களை உரித்து மாற்றம் செய்வதற்காக காணிச் சட்டத்தின் மீதான ஒழுங்கு விதிகளை ஆக்குப் பணிகளை நிறைவு செய்ய காணி அமைச்சு தவறியதன் காரணமாக சான்றிதழ் வழங்கும் நடவடிக்கை தாமதமானதாக அதிகாரசபையின் தலைவர் கணக்காயவ்வின்பொருட்டு அறிவித்திருந்தார். | (உ) காணிச்சட்டத்தின் மீதான ஒழுங்கு விதிகளை ஆக்கும் பணி நிறைவடையும் வரை ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உறுதி வழங்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துவதற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 7(1)ஆம் பிரிவின் கட்டளைகளினப்படி இந்த ஆதனங்களை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதகாரசபைக்கு சுவீகரிப்புளுச் செய்து உறுதி வழங்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கும், வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சுக்கும் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) மீளாய்வ ஆண்டில் மாகாணசபைகள் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் தொழிற்படும் 40 ஒப்பந்தங்களைப் பெற அதிகாரசபை எதிர்பார்த்தபோதும் அதிகாரசபை ஓர் ஒப்பந்தத்தையேனும் பெறத்தவறியது. | (ஊ) மீளாய்வு ஆண்டில் மாகாணசபைகள் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் தொழிற்படும் எந்தவொரு ஒப்பந்தத்தையும் வழங்க சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. இருப்பினும், 2016ஆம் ஆண்டில் மீண்டும் இவ்வாறான கருத்திட்டங்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| **4.2** முகாமைத்துவ வினைத்திறனின்மை | |
| பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன | |
| (அ) 2014 திடிசம்பர் 31ஆம் திகதியன்று பணிக்கொடை கடப்பாடுகள் ரூபா 27,329,966ஆகக் காணப்பட்டபோதும் அதற்கென செய்யப்பட்ட முதலீடு ரூபா 3,524,277 பெறுமதியைக் கொண்டிருந்தது. அதன்படி சேமிப்புத் தொகையான ரூபா 23,805,739ஐ முதலீடு செய்வதற்கு அதிகாரசபை எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்கவில்லை. | (அ) பணிக்கொடை பெறுமதி ரூபா 27,329,966 தொகையில் ரூபா 8,637,547 ஏற்கெனவே முதலீடு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய பெறுமதியும் அடங்கும் குறித்த தொகையை முதலீடு செய்வதற்காக அடுத்துவரும் சில ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) வீடமைப்பு சட்ட திருத்த வேலைகளின்போது கணிய உண்டியலின்படி பூர்த்திசெய்யாத வேலைகளுக்காக 2013ஆம் ஆண்டில் தவறாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,836,596ஐ 2015 மே மாதம் 30ஆம் திகதியளவிலும் அறவிட்டுக்கொள்ள அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | (ஆ) கொழும்பு 15 டயஸ் பிளேஸ், திசாநாயக்க வத்த ABC கட்டடங்கள் தொடர்பிலான முறைகேடு பற்றி முன்னாள் தலைவர் விசாரணையொன்றை மேற்கொண்டு அதன் அறிக்கையை அரசாங்க கணக்காய்வுப் பிரிவுக்குச் சமர்ப்பித்துள்ளார். அதன்படி நிதி மோசடி இடம்பெற்றுள்ளமை உறுதி செய்யப்படவில்லையென்பதுடன் கடமையை உரியமுறையில் நிறைவேற்ற தவறியுள்ளமை பற்றி மட்டுமே தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆகவே அதனடிப்படையில் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்நிலைமையை கவனத்தில் கொண்டு 2015.08.24ஆம் திகதி நடைபெற்ற 102ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதன்படி பொது நிருவாக அமைச்சின் கீழுள்ள ஒழுக்காற்று அலுவலர்களின் குழாத்தில் இடம்பெறும் அலுவலர் ஒருவரிடமிருந்து மீண்டும் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் உசிதமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| (இ) அதிகாரசபை ஊழிய சேமலாபநிதியச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணன விதத்தில் 2006 சவனவரி 06ஆம் திகதி தொடக்கம் 2013 திசெம்பர் 31ஆம் திகதி வரை பணியாளர்களின் ஊழியர் சேமலாப நிதி கணிக்கப்பட்டுள்ளதால் மீளாய்வு ஆண்டின் இறுதியில் அதற்காக எற்கவேண்டியுள்ள மேலதிக செலவு ரூபா 5,077,920ஆக அமைந்ததோடு அதற்கான அபராதத் தொகையாக ரூபா 6,245,108 காணப்பட்டது. அதன்படி திசெம்பர் 31ஆம் திகதி அதிகாரசபை எற்க வேண்டியிருந்த முழுமொத்த நட்டம் ரூபா 11,332,029ஆகும். | (இ) அநேகமான அரச நிறுவனங்களில் இந்நிலைமை காணப்படுவதோடு தொழில் திணைக்களத்தின் அறிவிப்பின்படி கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காக 2014ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. செலுத்த வேண்டிய தொகை கணிக்கப்பட்டு தொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் தொழில் திணைக்களம் கணித்தல் பற்றி எழுத்துமூலம் அறிவிக்கும்வரை கொடுப்பனவுகளைச் செலுத்தக் கூடாதென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அறிவுறுத்தல் கிடைத்ததும் கொடுப்பனவுகளைச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதோடு அபராதத் தொகையை ஒதுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) 1973ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க பொதுவசதிகள் சபைச்சட்டம் மற்றும் 1973ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தில் அவசியமான திருத்தங்களை மேற்கொள்ள மீளாய்வு ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்தபோதும் 2015 மே 30ஆம் திகதியளவிலும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதியையேனும் பெற்றிருக்கவில்லை. | (ஈ) உரிய சட்டத்திருத்தம் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின் யோசனையை மீண்டும் ஆராயும்பொருட்டு அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (உ) அதிகாரசபை அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்திடம் ஒப்படைக்கப்பட்ட ஒப்பந்தங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி கடந்துள்ள நாட்களுக்குரிய ஒப்பந்த முறிவு நட்டஈடு (liquidated damages) பற்றி உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | (உ) கருத்திட்ட ஒப்பந்த காலம் நிறைவடைந்த பின்னர் உரிய திருத்த வேலைகளை நிறைவுசெய்ய முடியாமை தொடர்பில் தாக்கம் செலுத்திய நடைமுறைச் சிக்கல்களை கவனத்தில் கொண்டு குறித்த கருத்திட்டங்களின் ஒப்பந்த காலம் 2015.11.30 வரை நீடிக்கப்பட்டுள்ளது. அதன்படி இத்திருத்த வேலைகள் அரச நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்படுவதால் அபராதத்தொகை அறவிடுவதற்கான தேவை எழவில்லை. |
| **4.3** தொழிற்பாட்டு வினைத்திறனின்மை | |
| 2003ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க பொது வாதிகள் சபை (திருத்தச்) சட்டத்தின்படி அதிகாரசபை கூட்டாட்சி ஆதனங்களில் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை உயிரோட்டமான முறையில் பேணிவர வேண்டியபோதிலும், மேற்பார்வையில் காணப்பட்ட பலவீனங்களினால் மீளாய்வு ஆண்டின் இறுதியில் அதிகாரசபையினால் அமைக்கப்பட்ட 628 முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களில் 378 கூட்டுத்தாபனங்கள் அதாவது 60 சதவீதம் இயங்கா நிலையை அடைந்திருந்தது. | முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களின் இயங்கா நிலை முகாமைத்துவ வினைத்திறனின்மை அல்ல என்பதுடன் அரச கூட்டாட்சி ஆதனங்களில் வசிக்கும் வீட்டு உரிமையாளர்களின் உளப்பாங்கு, தனிப்பட்ட கருத்துக்கள் மற்றும் அவர்களுடனான இணைத்தொடர்பு பற்றிய சிக்கல்களினால் இந்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் இதுபோன்ற நிலைமைகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்ட அரச ஆதனங்களில் நேரடியாக தாக்கம் செலுத்தியுள்ளதுடன் தனியார் கூட்டாட்சி ஆதனங்களில் தாக்கம் ஏற்படவில்லை. |
| **4.4** பயன்தராத கொடுக்கல் வாங்கல்கள் | |
| ஆதிகாரசபை அரச தொடர்மாடி வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைகளின் மூலம் மீளாய்வு ஆண்டில் ரூபா 5,935,126ஐ வருமானமாக ஈட்டியபோதும் அத்தொகையில் ரூபா 4,343,255ஐ குறித்த வீட்டுத்திட்டங்களை மீண்டும் மக்கள் உரிமைக்குக் கையளிக்கும் வைபவங்களின் பொருட்டு செலவிட்டிருந்தது. இது ஈட்டிய வருமானத்தில் 73 சதவீதமாக அமைந்தது. | (அ) இப்பதவிக்கு அலுவலர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் 2014.12.11ஆம் திகதி நேர்முகப்பரிட்சையொன்று நடாத்தப்பட்டுள்ளது. இதில் இடம்பெற்ற முறைகேடுகள் காரணமாக தெரிவு செய்த அலுவலரை நியமிக்க முடியாத நிலை எற்பட்டதுடன் மீண்டும் விண்ணப்பங்கள் கோர முடியாத நிலை காணப்படுகிறது. மேலும், நிரந்தரமாக அலுவலர் ஒருவரை நியமிக்கும் வரை தற்போது பிரதி பொதுமுகாமையாளராக பணியாற்றும் அலுவலரை குறித்த பதவியில் 2015.01.28ஆம் திகதி தொடக்கம் பதில் கடமையாற்றுவதற்கு அமைச்சின் செயலாளர் நியமித்துள்ளார். |

| | |
|---|---|
| **4.5** பதவியணி நிருவாகம் | |
| மீளாய்வு ஆண்டுக்கென அங்கீகரிக்கப்பட்ட உண்மையான பதவியணி முறையே 139 மற்றும் 110 ஆக இருந்ததுடன் அதுபற்றிய கீழ்வரும் அவதானிப்புகள் இடம்பெற்றுள்ளன. | |
| (அ) 2014ஆம் ஆண்டு மார்ச்ச 07ஆம் திகதி மற்றும் 14.'.0014.'.517.'.001ஆம் இலக்க அமைச்சரவையின் தீர்மானத்தின்படி 2013 திசெம்பர் 29ஆம் திகதி தொடக்கம் அடுத்துவரும் ஓராண்டு காலத்திற்கென ஓய்வுபெற்றுள்ள பொது முகாமையாளரின் சேவையை ஒப்பந்த அடிப்படையில் அதிகாரசபைக்காக மீண்டும் பெற்றுக்கொள்வதற்கும் அக்காலப்பகுதியின் பின்னர் குறித்த பதவிகளில் நியமிப்பதற்குப் பொருத்தமான நியமத்தர் ஒருவரை அவரின் மேற்பார்வையின் கீழ் பயிற்றுவிக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தபோதும் 2014 திசெம்பர் 28ஆம் திகதி இவரின் சேவை முடிவுறும் வரை அதற்குப் பொருத்தமான நியமத்தவர் ஒருவரை இனம்காணாத காரணத்தினால் குறித்த பதவி 2015 மே 31ஆம் திகதியளவிலும் வெற்றிடமாக இருந்ததுடன் அப்பதவியில் பதில் கடமை ஆற்றுவதற்காக அமைச்சின் செயலாளரினால் ஓர் அலுவலர் நியமிக்கப்பட்டிருந்தார். | (அ) இப்பதவிக்கு அலுவலர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் 2014.12.11ஆம் திகதி நேர்முகப்பரிட்சையொன்று நடாத்தப்பட்டுள்ளது. இதில் இடம்பெற்ற முறைகேடுகள் காரணமாக தெரிவு செய்த அலுவலரை நியமிக்க முடியாத நிலை எற்பட்டதுடன் மீண்டும் விண்ணப்பங்கள் கோர முடியாத நிலை காணப்படுகிறது. மேலும், நிரந்தரமாக அலுவலர் ஒருவரை நியமிக்கும் வரை தற்போது பிரதி பொதுமுகாமையாளராக பணியாற்றும் அலுவலரை குறித்த பதவியில் 2015.01.28ஆம் திகதி தொடக்கம் பதில் கடமையாற்றுவதற்கு அமைச்சின் செயலாளர் நியமித்துள்ளார். |
| (ஆ) அதிகாரசபையின் பிரதி பொது முகாமையாளர் (ஒழுங்குபடுத்தல்) பதவியும் 07 உதவிப் பொதுமுகாமையாளர் பதவிகளும் தொடர்ச்சியாக வெற்றிடமாக இருக்கின்றமை நிறுவனத்தின் செயல் நிறைவேற்றத்தில் நேரடியாகத் தாக்கம் செலுத்தமாட்டாதென்பதை கணக்காய்வின்போது ஏற்றுக்கொள்ள முடியாது. | (ஆ) வெற்றிடமாகவுள்ள பொதுமுகாமையாளர் (ஒழுங்குபடுத்தல்) பதவியிலும் உதவி பொது முகாமையாளர் பதவிகளிலும் பதில் கடமை அடிப்படையில் தற்போதுள்ள சிரேஷ்ட அலுவலர்கள் கடமையாற்றி வருகின்றனர். இந்நிலை நிறுவனத்தின் செயல் நிறைவேற்றத்தில் தாக்கம் செலுத்தவில்லை. எவ்வாறாயினும் இப்பதவி வெற்றிடங்களை விரைவில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) வெற்றிடமாகவுள்ள 18 இரண்டாம் நிலைப் பதவிகள் 04 முதன்மை நிலைப் பதவிகளைப் பூர்த்திசெய்ய மீளாய்வு ஆண்டில் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. | (இ) அதிகாரசபையின் நிதி நிலையைக் கவனத்தில் கொண்டு இரண்டாம் நிலைப் பதவிகளைப் பூர்த்தி செய்தல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் 2015ஆம் ஆண்டு அவற்றைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) 2003ஆம் ஆண்டு யூன் 02ஆம் திகதி, PED/12ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்று நிருபத்தின் 9.3.1ஆம் பந்திக்கு முரணான விதத்தில் 04 அலுவலர்கள் 01 தொடக்கம் 03 ஆண்டுகள் வரையான காலத்திற்கு பதில் கடமையாற்ற நியமிக்கப்பட்டிருந்தனர். | (ஈ) இப்பதவிகளுக்கான முறையான ஆட்சேர்ப்பு நடைபெறும் வரை பதில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். |
| **5** கணக்கீட்டு நடவடிக்கைகளும் நிருவாகமும் | |
| **5.1** கூட்டிணைவுத்திட்டம | |
| பின்வரும் அவதானிப்புகள் இடம்பெற்றுள்ளன<br>(அ) 2013 திசெம்பர் 26ஆம் திகதி நடைபெற்ற 91ஆவது பணிப்பாளர் சபைக்கு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 2014 – 2018 இற்கான கூட்டினைவுத் திட்டத்தில் அடங்கும் மீளாய்வு ஆண்டில் நடைமுறைப்படுத்த வேண்டிய பின்வரும் மூலோபாயங்கள் மீளாய்வு ஆண்டின் கூட்டிணைவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அதில் காட்டப்பட்டிருந்த எந்தவொரு பணியும் மீளாய்வு ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>- தொழிற்பாட்டு நடவடிக்கைக்கென ஆழும் நிதியை ஆரம்பித்தல் | தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கான ஆழும் நிதியை ஆரம்பித்தல் தொடர்பாக 2014, 2015ஆம் ஆண்டுகளில் திறைசேரியிலிருந்து நிதியினை பெற்றுக்கொள்வதற்கான கருத்திட்ட அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தபோதும் திறைசேரி அதற்குரிய நிதியை வழங்கவில்லை. எவ்வாறாயினும் 2016ஆம் ஆண்டுக்காகவும் மேற்படி கருத்திட்ட அறிக்கையை ஆற்றுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

| | |
|---|---|
| - ஆதிகாரசபைக்கென நிரந்தரமான அலுவலகக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான காணியொன்றை கொள்வனவு செய்தல். | அதிகாரசபைக்கென நிரந்தரமான அலுவலகக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான காணியொன்றை கொள்வனவு செய்தல் சம்பந்தமாக 2013ஆம் ஆண்டு திறைசேரியிலிருந்து நிதியைப்பெற எதிர்பார்த்தபோதும் திறைசேரி அதற்கான நிதியை வழங்கவில்லை. அதன்படி 2014ஆம் ஆண்டின் செயற்பாட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| - பங்குதாரர்களின் (கூட்டாட்சி ஆதனங்களை கொள்வனவு செய்ய உத்தேசித்துள்ளவர்களின்) உரிமைகளைப் பாதுகாத்தல்) | பங்குதாரர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அதிகாரசபை இன்றளவில் சில வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளதோடு அவை முடிவுற்று இசைவுச் சான்றிதழ் பெறப்பட்ட பின்னர் அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். |
| (ஆ) மீளாய்வு ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தில் குறித்த ஆண்டினுள் நிறைவேற்ற வேண்டிய பின்வரும் பணிகள் ஆண்டிறுதியளவிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | |
| - பதிவு செய்யப்படாத அரச தனியார் ஆதனங்களை ஒழுற்குறுத்துதல் | இவ்வாறான ஆதனங்களை ஒழுங்குறுத்துவதற்காக சில வழங்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதோடு 1999ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தை திருத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| - இயங்கா நிலையிலுள்ள முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களுக்கான நிருவாகிகளை நியமித்தல் | இயங்கா முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களுக்கு நிருவாகிகளை நியமித்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செய்ய வேண்டியிருப்பினும் 2014ஆம் ஆண்டில் இவ்வாறான முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள் இனம்காணப்படவில்லை. |
| - கூட்டாட்சி ஆதன முகாமைத்துவ சேவை அலகுகளை ஆரம்பித்தல் | கூட்டாட்சி ஆதன முகாமைத்துவ சேவை அலகுகளை ஆரம்பிப்பதற்காக திறைசேரியிலிருந்து நிதியைப் பெற்றுக்கொள்ளும்பொருட்டு 2014ஆம் ஆண்டில் கருத்திட்ட அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்ட போதும் திறைசேரி அதற்கான நிதியை வழங்கவில்லை. 2016ஆம் ஆண்டில் அந்த அறிக்கை மீண்டும் திறைசேரியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| - சுனாமி ஆதன குடியிருப்பாளர்களுக்கு உரித்து மாற்றம் செய்தல் | சுனாமி ஆதன உரிமையாளர்களுக்கு உரித்து மாற்றம் செய்தல் பற்றிய ஏற்பாடுகள் காணிச்சட்டத்தில் இல்லாத காரணத்தினால் அதற்கான ஒழுங்கு விதிகளை ஆக்கும் பணியை காணித்திணைக்களம் மேற்கொண்டுள்ளபோதும் அப்பணிகள் இன்றளவிலும் நிறைவு பெறவில்லை. அதன்படி, சுனாமி ஆதன குடியிருப்பாளர்களுக்கான உரித்து மாற்றல் நடவடிக்கையில் தாமதம் ஏற்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட ஆதனங்களில் குடியிருப்போருக்கு உறுதிகள் வழங்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் நோக்கத்துடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 7(1)ஆம் பிரிவின்படி குறித்த ஆதனங்களை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சுவீகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| - கூட்டாட்சி ஆதனங்களில், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் தெருக்களை உள்ளூராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைத்தல். | கூட்டாட்சி ஆதனங்களில் பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் தெருக்களை உள்ளூராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைப்பதற்காக அதிகாரசபை தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்தபோதும் பராமரிப்புக்கான நிதி இல்லையெனத் தெரிவித்த உள்ளூராட்சி நிறுவனங்கள் அவற்றை ஏற்க மறுத்துள்ளன.<br><br>இதுபற்றி மீண்டும் ஆராய்ந்த பின்னர் ஆதன உரிமையாளரான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை உடாக மீண்டும் கோரிக்கை விடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) மீளாய்வு ஆண்டுக்குரிய செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மூலோபாய நடவடிக்கைகளில் நிறைவேற்ற வேண்டிய அளவு மற்றும் செயல் நிறைவேற்ற கணிப்பீட்டுக்கான சுட்டிகள் (Idicators) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபை ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையாகவிருப்பதால் செயல் நிறைவேற்ற சுட்டிகள் தயாரிக்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் மட்டும் அவற்றை தயாரித்து வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **5.2** பாதீட்டுக் கட்டுப்பாடு | |
| அதிகாரசபையினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின்படி பாதீட்டுக்கும் உண்மையான தொகைக்குமிடையில் குறிப்பிடத்தக்க வித்தியாசம் காணப்பட்டதால் பாதீட்டு அறிக்கை பயனுள்ள முகாமைத்துவ நிருவாக கூறாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பாதீட்டு அறிக்கை அதிகாரசபையின் நிருவாக கூறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. |
| **5.3** ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்தல் | |
| ஆதிகாரசபை 2012,2013ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கைகளை மீளாய்வு ஆண்டின் இறுதியளவிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. | அதிகாரசபை 2012ஆண்டுக்குரிய ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தியுள்ளது.<br>2013ஆம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கை அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தியுள்ளது. |
| **6** முகாமைகளும் கட்டுப்பாடுகளும் | |
| கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு ரீதியான குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபை தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழ்காணும் துறைகளில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.<br>(அ) கணக்கீடு<br>(ஆ) சொத்து முகாமைத்துவம்<br>(இ) கூட்டாட்சி ஆதன முகாமைத்துவம்<br>(ஈ) முற்பணக் கட்டுப்பாடு<br>(உ) கிடைக்க வேண்டிய, செலுத்தவேண்டிய கணக்குகள்<br>(ஊ) பாதீடு<br>(எ) ஒப்பந்தக் கட்டுப்பாடு | முறைமைகள், கட்டுப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி உள்ளகக் கணக்காய்வு பிரிவிலிருந்து பலவீனங்கள் தொடர்பான அறிக்கைகளைப் பெற்று பிழைகளைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும். |



ඩබ්ලිව්.පී.සී.වික්‍රමරත්න
වැඩබලන විගණකාධිපති

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. } ඊඑච්/ඩී/සීඑමඑ/1/14/8

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2015 දෙසැම්බර් දින

11 JAN 2016

සභාපති

සභාධිපත්‍ය කළමනාකරණ අධිකාරිය

**සභාධිපත්‍ය කළමනාකරණ අධිකාරියේ 2014 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1971 අංක 38 දරන මුදල් පනතේ 14(2)(සී) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව**

---

මාගේ සමාංක හා 2015 සැප්තැම්බර් 07 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමග එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

එච්.එම්.ගාමිණී විජේසිංහ
විගණකාධිපති

11/01/16

පිටපත් : 1. ලේකම් - නිවාස හා ඉදිකිරීම් අමාත්‍යාංශය
2. ලේකම් - මුදල් අමාත්‍යාංශය

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. } ஈஎச்/டீ/சீஎம்ஏ/1/14/8

ඔබේ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 2015 செப்தெம்பர் 07

தலைவர்,

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை

**கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 10 ஆம் இலக்க பொது வசதிகள் சபை அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

1.3 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

ஐயக் கடன் மற்றும் அறவிட முடியாக் கடன் ஒதுக்கீடு செய்யும் கொள்கையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வயதுப் பகுப்பாய்வு 04 - 05 வருடங்களுக்கிடையிலான தொகுதியிலுள்ள கடன்பட்டோருக்காக அறவிடமுடியாக்கடன் ஒதுக்கீடுகளின் அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வயதுப் பகுப்பாய்வில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன்பட்டோருக்காக 50 சதவீத அறவிடமுடியாக்கடன் ஒதுக்கப்பட்ட போதிலும் 1-2 வருடங்கள், 2-3 வருடங்கள் மற்றும் 3-4 வருடங்களான வயதுத் தொகுதிகளில் கடன்பட்டோருக்காக முறையே 0.1 சதவீதம், 0.5 சதவீதம்

மற்றும் 1.0 சதவீதம் ஆக ஐயக்கடன் ஒதுக்கீடுகள் பொருத்தப்பாடாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 10 வருடங்களை விஞ்சிய எந்தக் கடன்பட்டோரும் நிறுவனத்தில் காணமுடியாதிருந்த போதிலும் கணக்கீட்டுக் கொள்கையின் படி அதற்காக நூறு சதவீதம் ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான பணிக்கொடைப் பணம் ரூபா 2,951,460 தொகையினால் அதிகரித்து கணிப்பிடப்பட்ட காரணத்தினால் ஆண்டின் செலவினம் மற்றும் ஒதுக்கீடுகள் அப்பெறுமானத்தினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வீடமைப்புத் திட்டங்களில் அவசர மற்றும் அத்தியாவசிய திருத்தங்களுக்காக மீளாய்வாண்டின் போது திறைசேரியிலிருந்து கிடைத்த பணத்திலிருந்து சேமிக்கப்பட்ட ரூபா 61,088,018 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் திறைசேரி கட்டுநிதியாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அப்பெறுமதி "நிதியேற்பாடு" இன் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபை மீளாய்வாண்டில் ரூபா 10,449,154 தொகையான செயற்பாட்டு இலாபத்தினை பெற்றிருந்த போதிலும் வருமான வரி கணிப்பிடும் விபரம் எதுவும் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் மிகையூதியப் பங்குக் கணக்கில் ரூபா 2,500,000 தொகையான மீதி தொடர்பாக எவ்வித வெளிப்படுத்தல்களும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதிச் செலவினத்தினுள் ரூபா 54,423 தொகையான ஏனைய செலவினங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) முன்னைய ஆண்டிற்காகச் செய்யப்பட்ட ரூபா 26,806,383 தொகையான சீராக்கங்கள் நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் நீண்ட கால கடன் சீராக்கமாக பதியப்பட்டமையின் காரணமாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்ட நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் அப்பெறுமானத்தால் மிகைக் கணப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்ட கடன்பட்டோர் பெறுமதிக்குரிய நிதியேற்பாடுகள் கணக்குகளில் வைக்கப்பட்டமையினால் அந்த நிதியேற்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட ரூபா 2,840,620 தொகையான ஐயக்கடன் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் உருவான மீளாய்வாண்டின் தேறிய காசுப்பாய்ச்சல் அப்பெறுமதியால் குறைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(iii) செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக திறைசேரியிலிருந்து மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 10 மில்லியன் மற்றும் அதில் ஏற்பட்ட செலவினம் செயற்பாட்டு இலாபத்தைக் கணிப்பீடு செய்யும் போது கவனத்தில் கொள்ளப்பட்டிருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது நிதிச் செயற்பாடுகளின் அடிப்படையிலான காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டின் போது வியாபாரக் கடன்பட்டோர், ஊழியர் கடன் மற்றும் பெறவேண்டிய மீதிகளின் அதிகரிப்பு ரூபா 2,096,688 ஆக இருந்த போதிலும் அந்தப் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றத்தின் கீழ் ரூபா 3,960,495 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் உருவான தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 1,863,807 இனால் குறைக் கணப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(v) செயற்பாட்டு நடவடிக்கைகளில் உருவான தேறிய காசுப்பாய்ச்சல் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் என்பன தனித்தனியாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தரொருவருக்குச் செலுத்தவேண்டிய ரூபா 157,989 தொகையான பணிக்கொடைப் பணம் பணிக்கொடை ஒதுக்கக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டு அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) முன்னைய ஆண்டில் நிலையான சொத்துக்களுக்கான கணப்பீட்டுத் தவறின் காரணமாக மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட பெறுமானத் தேய்வு ஏற்பாடு மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய பெறுமானத் தேய்வு ஒதுக்கத்திலிருந்து ஈடுசெய்வதன் மூலம் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 2,935,540 இனால் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) கணிப்பீட்டுத் தவறின் காரணமாக மீளாய்வாண்டிற்கான அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடன் ஏற்பாடுகள் ரூபா 3,552,990 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்ற வரிசையில் விடயங்கள் மாத்திரம் குறிப்பிடப்பட்டு அதற்குரிய விடயங்கள் விரிவாக அட்டவணையாக நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் நிலையான சொத்துக்களின் மேலதிக 06 வரிசை

விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 23,658,765 தொகையான ஒதுக்கம் மற்றும் ரூபா 2,262,663 தொகையான மூலதன மாற்றல்கள் தொடர்பாக போதியளவான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்ட திரண்ட நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 37,255,538 தொகைக்கான சீராக்கங்கள் நிதி நிலைமைக் கூற்றின் முன் பக்கத்தில் மீண்டும் விபரமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்படுகின்ற சகல புள்ளிவிபர ரீதியிலான தகவல்களுக்காக முன்னைய காலப்பகுதிக்குரிய ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்குரிய உரிமை மூலதன மாற்றங்கள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட உரிமை மூலதன மாற்றக்கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(க) முன்னைய ஆண்டுகளின் பிழைகளை சரிசெய்தல் மீளாய்வாண்டின் போது பின்னோக்கிய ரீதியில் மீள வெளிப்படுத்துதல் மூலம் சரிசெய்து அது தொடர்பாக போதியளவான வகையில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 18,132,818 கூட்டுத்தொகையான வாடகைப் பணம் மற்றும் மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 18,705,203 நிலுவையாக இருந்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது மீளாய்வாண்டின் இலாபத்தில் சீராக்கப்பட்டிருந்தது.

(கா) சுயவிருப்பில் ஓய்வுபெறும் உத்தியோகத்தர்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்காக திறைசேரியினால் 1999 ஆம் ஆண்டின் போது அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட பணத்தில் எஞ்சியிருந்த ரூபா 9,125,215 தொகை திறைசேரி அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது வருமானத்திற்கு எடுக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் இலாபம் அப்பெறுமானத்தினால் மிகைக் கணப்பீடு செய்யப்பட்டிருந்தது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்ட நான்கு கடன்பட்டோர்களிடமிருந்து கிடைக்கவேண்டிய மீதி ரூபா 4,301,290 கூட்டுத்தொகையாக இருந்ததுடன் அக்கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டு முதல் மத்தியஸ்தக் கட்டணமாக அதிகாரசபைக்கு ரூபா 2,133,646 தொகை அறவிடவேண்டியிருந்த போதிலும் அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 ஆம் ஆண்டு முதல் கம்பஹா வைத்தியசாலையிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 621,435 தொகை 2015 யூன் 30 வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தங்களுக்காக முறையே ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்தவேண்டிய ரூபா 12,391,260 கூட்டுத்தொகையான நிறுத்திவைத்தல் பணத்திலிருந்து ரூபா 9,604,028 தொகை 2015 யூன் மாத இறுதி வரையிலும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இரண்டு வருடங்களை விஞ்சிய பாதுகாப்பு வைப்பு ரூபா 1,502,212 தொகை நிறுத்திவைத்தல் பணம் (Retention) ரூபா 5,946,862 தொகை மற்றும் கேள்வி வைப்பு ரூபா 81,400 தொகை தொடர்பாக அதிகாரசபை எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபை (திருத்தப்பட்ட) அதிகாரச் சட்டம் | |
| (i) 5 ஆம் பந்தியின் (உ) பிரிவு | கூட்டு ஆதன முகாமைத்துவ சபையினைத் தாபித்ததன் பின்னர் அதிகாரசபையினால் அதன் செயற்பாடுகளின் முகாமைத்துவம் செய்தல் மற்றும் நிருவகித்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபை வழங்கிய தகவல்களின் படி 2005 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை கூட்டு ஆதன சான்றிதழ் வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு விநியோகிக்கப்பட்ட மொத்த சான்றிதழ்களின் அளவு 813 ஆகும். அவ்வாறே அந்தக் காலப்பகுதியின் போது பதிவு செய்வதற்கு இலக்கிடப்பட்ட முகாமைத்துவ அதிகாரசபைகளினதும் குழுக்களினதும் எண்ணிக்கை 1,080 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் 829 முகாமைத்துவ சபைகள் மற்றும் குழுக்கள் மாத்திரம் அமைக்கப்பட்டிருந்தன. |

AGDSL
විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

10

| | |
|---|---|
| (ii) 5 ஆம் பந்தியின் (எ) பிரிவு | கூட்டு ஆதன சொத்துக்களின் பொது வசதிகளைப் பராமரிப்பதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும் மாளிகாவத்தை மற்றும் ஜல்தர வீடமைப்புத் திட்டங்களில் பொது வசதிகளை உள்ளூராட்சி நிறுவனங்களுக்குக் கையளிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பாக அதிகாரசபையின் தலைவர் பின்வருமாறு கூறியிருந்தார். *கூட்டு ஆதன சொத்துக்களில் பாதைகள், பூங்காக்கள் போன்ற பொது வசதிகள் அதிகாரச்சட்டத்தின் (எ) பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும் மாளிகாவத்தை மற்றும் ஜல்தர போன்ற வீடமைப்புத் திட்டங்களில் பொது வசதிகளை திருத்தியமைப்பதற்கு போதியளவாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமாக நிதி காணப்படாமையினால் கையளித்தல் நிராகரிக்கப்பட்டிருந்தது.* |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை<br>----------------------------- | |
| (i) VIII ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு | மாதாந்தம் சம்பளம் செலுத்துகின்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக சராசரியாக மேலதிக நேரக் கொடுப்பனவு அளவு நாளொன்றுக்கான சம்பளத்தில் எட்டில் ஒரு பங்காக இருக்கவேண்டிய போதிலும் அதிகாரசபையினால் பல்வேறு விகிதங்கள் பயன்படுத்தப்பட்டு மேலதிக நேரப்படி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| | | அங்கீகரிக்கப்பட்ட அளவினை விஞ்சி மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு ரூபா 2,332,888 ஆகும். |
| (ii) | VIII ஆம் அத்தியாயத்தின் 9.2 ஆம் பிரிவு | ஒரே கடமை நேரத்திற்காக விடுமுறை தினப்படி (1/30) மற்றும் மேலதிக நேரப்படி என்ற இரண்டும் செலுத்த முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணாக அதிகாரசபையினால் ஒரே சேவை நேரத்திற்காக அலுவலக உதவியாளர், கணக்கு உத்தியோகத்தர், பொறுப்பாளர், முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் அலுவலக தொழிலாளர்கள் போன்ற தரங்களுக்காக அந்த இரண்டு படிகளும் ஒரே தடவையில் செலுத்தப்பட்டிருந்ததுடன், அவ்வாறான மேலதிகப் படிக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட விடுமுறை தினப்படி ரூபா 869,711 ஆகும். |
| (iii) | XII ஆம் அத்தியாயத்தின் 15.10.1 ஆம் பிரிவு | வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக சம்பளமற்ற விடுமுறை விண்ணப்பிக்கின்ற உத்தியோகத்தரொருவருக்கு தங்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் பணம் முழுவதும் தீர்க்கப்படும் வரை சம்பளமற்ற விடுமுறை அங்கீகரிக்கப்பட முடியாத போதிலும் அதிகாரசபையின் சாரதிக்கு அவரிடமிருந்து அவ்வாறு அறவிடவேண்டிய ரூபா 74,262 தொகை கடன் பணம் அறவிடப்படாமல் மீளாய்வாண்டின் போது சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறைகள் அங்கீகரிக்கப்பட்டமையின் காரணமாக அந்தக் கடன் பணம் மீளாய்வாண்டின் ஒக்தோபர் மாதம் முதல் அறவிடப்படாது காணப்பட்டது |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 10,449,154 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 8,961,997 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 19,411,151 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் கூட்டு ஆதனங்களுக்காக சான்றிதழ் வழங்கும் வருமானம் ரூபா 67,105,814 இனால் உயர்வடைந்தமை அதிகரிப்பிற்கான பிரதான காரணமாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 48 மில்லியனால் அதாவது 77 சதவீதத்தினால் உயர்வடைந்திருந்த போதிலும் செலவினங்களைத் தீர்த்ததன் பின்னர் நிதி விளைவுகளில் ரூபா 449,155 இலாபமாக இருந்தது. (திறைசேரியின் பெறுவனவுகளை சீராக்குவதற்கு முன்) வருமானம் உயர்வடைவதற்கு ஒப்பாக செலவினங்களும் பாரியளவில் உயர்வடைந்தமையினால் நிதி விளைவு குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தது. ஊழியர் சம்பளம் மற்றும் படிகள் 70 சதவீதத்தினால் அதிகரித்தமை மற்றும் நிதிச் செலவினம் 140 சதவீதத்தால் உயர்வடைந்தமை செலவின அதிகரிப்பிற்கு நேரடியாகத் தாக்கமளித்திருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சேவைக் கட்டண வருமானம் 91 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் ஏனைய செயற்பாட்டு வருமானம் 18 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. ஏழுநாள் வைப்பிற்கான வட்டி வருமானம் அதிகரித்தமை, செயற்பாடல்லாத வருமானம் அதிகரிப்பிற்கு தாக்கமளித்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபையின் தேறிய சொத்துக்களின் ரூபா 12,504,708 சாதகமான மீதியொன்று காணப்பட்ட போதிலும் கடந்த 03 ஆண்டுகளில் அது முறையே ரூபா 24,750,830, ரூபா 15,788,833 மற்றும் ரூபா 31,794,284 ஆக மறைப் பெறுமதிகளைக் கொண்டிருந்தது. மீளாய்வாண்டின் போதும் ஊழியர் சம்பளக் கொடுப்பனவுகளுக்காக திறைசேரியிலிருந்து ரூபா 10 மில்லியன் பெறுவனவு மற்றும் ரூபா 28.80 மில்லியன் முன்னைய ஆண்டு சீராக்கம் தேறிய சொத்து அதிகரிப்பதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டில் அதிகாரசபையின் செயலாற்றல் பின்வருமாறு இருந்தது.

| விடயம் | இலக்கு | | செயல் முன்னேற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | பௌதீக | நிதி | பௌதீக | | நிதி | |
| | எண்ணிக்கை | ரூபா. மில்லியன் | எண்ணிக்கை | செயல் முன்னேற்றம் | ரூபா. மில்லியன் | செயல் முன்னேற்றம் |
| கூட்டு ஆதன சான்றிதழ் வழங்குதல் | 75 | 29.42 | 110 | 146 | 98.57 | 335 |
| முகாமைத்துவ சபைகளை உருவாக்குதல் | 50 | 0.25 | 45 | 90 | 0.09 | 36 |
| அரசாங்கத்தின் மாடி வீடுகளை மீளமைத்தல் | 09 | 122 | 08 | 88 | 7.43 | 06 |
| சுனாமி கையளித்தல் உரித்துறுதிகளை வழங்குதல் | 34 | 100 | - | - | - | - |

(அ) மீளாய்வாண்டின் போது கூட்டு ஆதன சான்றிதழ் வழங்குதலின் பௌதீக மற்றும் நிதி செயல்முன்னேற்றம் முறையே 146 சதவீதம் மற்றும் 335 சதவீதம் என்ற உயர்பெறுமதிகளைக் கொண்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது முகாமைத்துவ சபையை தாபித்ததன் நிதி செயல்முன்னேற்றம் எதிர்பார்த்த இலக்கில் 36 சதவீத பெறுமதியைக் கொண்டிருந்தது.

(இ) அதிகாரசபையினால் மீளாய்வாண்டிற்காக ரூபா 122 மில்லியன் நிதியேற்பாட்டின் அடிப்படையில் அரசாங்கத்தின் 09 அடுக்கு மாடி உத்தேச திட்டங்களை மீளமைக்கும் செயற்பாடுகள் இலக்கிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது அதில் 08 செயற்திட்டங்களின் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 13.48 மில்லியன் தொகையான எலபிட்டிவல வீடமைப்புத் திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 420 கூட்டு ஆதனங்களை காப்புறுதி செய்வதற்காக முகாமைத்துவ சபையை அமைப்பதற்கு அதிகாரசபை திட்டமிட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதில் 22 ஆதனங்கள் மாத்திரம் காப்புறுதி செய்யப்பட்டிருந்தன.

(உ) சுனாமி அனர்த்தங்களுக்கு உள்ளாகிய மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட 34 கூட்டுஆதன வீடமைப்புத் திட்டங்களிற்காக ரூபா 100 மில்லியன் நிதியேற்பாட்டின் அடிப்படையில் கூட்டு ஆதனங்களை பதிவுசெய்து சான்றிதழ்களை வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதில் எந்தச் சான்றிதழையும் அதிகாரசபை வழங்கியிருக்கவில்லை.

*2014 ஆம் ஆண்டின் போதும் சுனாமி ஆதனங்களில் வசிப்பவர்களுக்காக உரித்துறுதி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உரிய ஆதனங்களை கையளிப்பதற்காக காணிச் சட்டத்திற்கு பிரமாணங்களை விதிக்கும் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு காணி அமைச்சிற்கு முடியாமையின் காரணமாக அந்த ஆதனங்களுக்காக சான்றிதழ் வழங்கும் நடவடிக்கைகளும் தாமதமாக இருந்ததாக அதிகாரசபையின் தலைவரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.*

(ஊ) மீளாய்வாண்டின் போது மாகாண சபை மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற 40 ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகாரசபை எதிர்பார்த்திருந்த போதிலும் அதில் எந்தவொரு ஒப்பந்தத்தையும் பெற்றுக்கொள்வதற்கு அதிகாரசபை முடியாதிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பணிக்கொடைக் கடப்பாடுகள் ரூபா 27,329,966 ஆக இருந்த போதிலும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட முதலீட்டின் பெறுமதி ரூபா 3,524,227 ஆக இருந்தது. அதன் பிரகாரம் சேமிப்பு ரூபா 23,805,739 தொகை தொடர்பாக முதலீட்டினைச் செய்வதற்கு முகாமைத்துவம் எந்தவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) வீடமைப்புத் தொகுதிக் கட்டிடத்தை பழுதுபார்க்கும் போது, அளவிடைப் பத்திரங்களின் படி நிறைவேற்றப்படாத வேலை விடயங்களுக்காக 2013 ஆம் ஆண்டின் போது பிழையாகச் செலுத்தப்பட்ட ரூபா 3,839,596 தொகை 2015 மே 30 வரையிலும் அறவிடுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) அதிகாரசபையினால் ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக 2006 சனவரி 06 ஆந் திகதி முதல் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஊழியர்களின் சேமலாப நிதியம் கணிப்பிடப்பட்டமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் அதற்காக செலவிடப்பட வேண்டிய மேலதிக செலவினம் ரூபா 5,077,920 ஆக இருந்ததுடன் அதற்குரிய தண்டப்பணம் ரூபா 6,245,108 ஆக இருந்தது. அதன் பிரகாரம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி அதிகாரசபைக்கு செய்வதற்கு ஏற்பட்ட ஒட்டுமொத்த நிதி நட்டம் ரூபா 11,332,029 ஆகும்.

16

(ஈ) 1973 இன் 10 ஆம் இலக்க பொதுவசதிகள் சபை அதிகாரச்சட்டம் மற்றும் 1973 இன் 11 ஆம் இலக்க குத்தகை வீட்டு உரிமைகள் அதிகாரச்சட்டங்களில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2015 மே 30 ஆந் திகதி வரையிலும் உரிய திருத்தங்களுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) அதிகாரசபையினால் அரசாங்க அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட நிர்மாண ஒப்பந்தங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்படவேண்டிய திகதியின் பின்னர் தாமதமாகும் தினங்களுக்குரிய தண்டப்பணம் (Liquidated Damages) தொடர்பாக உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபை (திருத்த) அதிகாரச்சட்டத்தின் படி அதிகாரசபையினால் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை தொடர்ச்சியாக பேணிச்செல்லப்பட வேண்டிய போதிலும் மேற்பார்வை நலிவுகளின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபையினால் உருவாக்கப்பட்ட 628 முகாமைத்துவ சபைகளில் 378 அல்லது 60 சதவீதம் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அதிகாரசபையினால் அரசாங்கத்தின் மாடி வீடுகளை திருத்துவதன் மூலம் மீளாய்வாண்டின் போது ரூபா 5,935,126 தொகையான வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 4,343,255 தொகை அந்த வீடமைப்புத் திட்டத்தை மீண்டும் மக்களுக்கு உரித்தினை வழங்கும் விழாவிற்காக செலவிடப்பட்டிருந்தது. அது உழைக்கப்பட்ட வருமானத்தில் 73 சதவீதமாகும்.

4.5 **பதவியணியினர் நிர்வாகம்**

மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 139 மற்றும் 110 இற்கிடையே இருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 மார்ச் 07 ஆந் திகதிய 14/0014/517/001 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2013 திசெம்பர் 29 ஆந் திகதி முதல் ஒரு வருட காலத்திற்காக அதிகாரசபையில் ஓய்வுபெற்றுச் சென்ற பொது முகாமையாளரின் சேவை ஒப்பந்த அடிப்படையில் மீள அதிகாரசபைக்குப் பெற்றுக்கொள்வதற்கும் அந்தக் காலப்பகுதியின் பின்னர் அப்பதவிக்காக தகுதியான பதிலீட்டாளர் ஒருவருக்கு அவரின் மேற்பார்வையின் கீழ் பயிற்சியளிப்பதற்கு அமைச்சுச் செயலாளர் அறிவித்திருந்த போதிலும் 2014 திசெம்பர் 28 ஆந் திகதி அவரின் சேவை முடிவடையும் போது அதற்காக தகுதியான பதிலீட்டாளர் ஒருவர் கண்டறியப்படாமையின் காரணமாக அப்பதவி 2015 மே 31 வரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் பதவியின் பதில் கடமைக்காக அமைச்சின் செயலாளரினால் உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) அதிகாரசபையின் பிரதி பொது முகாமையாளர் (செயற்பாட்டு) பதவி மற்றும் 07 உதவிப் பொது முகாமையாளர் பதவிகள் நீண்ட காலமாக வெற்றிடமாகக் காணப்படுகின்றமை நிறுவனத்தின் செயலாற்றலுக்கு நேரடியாகத் தாக்கமளித்தது என்பதை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது.

(இ) வெற்றிடமான 18 இரண்டாம் நிலைப் பதவிகளையும் 04 ஆரம்பநிலை பதவிகளையும் நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் போதும் எவ்வித முயற்சியும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.3.1 ஆம் பந்திக்கு முரணாக 04 உத்தியோகத்தர்கள் 01 வருடம் முதல் 03 வருடங்கள் வரையான காலத்தில் பதில் கடமைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

5. **கணக்களிப்பொறுப்புப் நல்லாளுகையும்**

5.1 **செயல் நடவடிக்கைத்திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 26 ஆந் திகதிய 91 ஆம் இலக்க பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்ட 2014 - 2018 இற்கான கூட்டிணைந்த திட்டத்தில் அடங்கியுள்ள மீளாய்வாண்டின் போது அமுல்படுத்த வேண்டிய பின்வரும் உபாய வழிகள், மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அதில் எவ்வித செயற்பாடுகளும் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான சேமவைப்பு நிதியமொன்றை ஆரம்பித்தல்.

- அதிகாரசபைக்கு நிரந்தர அலுவலகக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக காணியொன்றைக் கொள்வனவு செய்தல்

- கூட்டு ஆதனதாரர்களின் (கூட்டு ஆதனங்களைக் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்ப்பவர்களின்) உரித்தை பாதுகாத்தல்.

(ஆ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஆண்டுகளின் போது நிறைவேற்ற வேண்டிய பின்வரும் செயற்பாடுகள் ஆண்டின் இறுதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- பதிவு செய்யப்படாத அரசாங்க/ தனியார் ஆதனங்களை சட்டரீதியாக்குதல்
- செயற்பாடற்ற முகாமைத்துவ சபைக்காக நிருவகிப்பாளரை நியமித்தல்
- கூட்டு ஆதன முகாமைத்துவ சேவை அலகொன்றை ஆரம்பித்தல்
- சுனாமி ஆதனங்களில் வசிப்பவர்களுக்கு உரித்தைக் கையளித்தல்
- கூட்டு ஆதனங்களில் பூங்கா, விளையாட்டரங்கு மற்றும் வீதிகளை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கையளித்தல்.

(இ) மீளாய்வாண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட உபாய வழிகளுக்குரிய செயற்பாடுகளிலிருந்து நிறைவேற்ற வேண்டிய அளவு மற்றும் செயலாற்றல் மதிப்பீட்டின் குறிகாட்டிகள் (Indicators) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

அதிகாரசபையினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளுக்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.3 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

அதிகாரசபையினால் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) கூட்டு ஆதன முகாமைத்துவம்
(ஈ) முற்பணக் கட்டுப்பாடு
(உ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்
(ஊ) பாதீடு தயாரித்தல்
(எ) ஒப்பந்த நிர்வாகம்

ஒப்பம்:- டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)